
# கேணிச் சுடர்



மலர் - 01 இதழ் - II

## தி/கிண்/ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திி/கிண்/ ஆலங்கேணி

விநாயகர் மகா வித்தியாலயம்

# கேணிச்சுடர்

## மகுடவாசகம்

நல்லன கற்று நற்குடியாவோம்

## தூர நோக்கு

கிடைக்கக் கூடிய பொருத்தமான வளங்களைப் பயன்படுத்தி தனியாள் விருத்தியினூடாக சமூக விருத்தியை ஏற்படுத்துதல்

## பணிக்கூற்று

மாணவர்களை வினைத்திறன் மிக்க கலைத்திட்ட செயற்பாடுகள் ஊடாக சிறந்த ஆளுமைப் பண்புடைய நவீன உலகிற்கு முகங்கொடுக்கக் கூடிய சமுதாயமாக தோற்றுவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் ஆசிச்செய்தி

கிண்ணியாவின் குக் கிராமமான ஆலங்கேணியின் சுடர் விளக்காய் திகழும் தி/கிண்/ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்திலே எண்ணற்ற ஆற்றல்களை தன்னுள் புதைத்துக் கொண்டு வெளிக்கொணர வழி தேடிக் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களின் ஆக்கங்களை தொகுத்து நிற்கும் "கேணிச் சுடர்" இதழ் - 02 சஞ்சிகைக்கு ஆசி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப் பாடசாலையின் கற்றல், கற்பித்தல் மாத்திரமின்றி இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் சிறந்து விளங்குவதற்கான ஆதாரமாக கேணிச்சுடர் திகழ்கின்றது. இச் சஞ்சிகையானது மாணவர்களது திறமைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கமளிக்கக் கூடிய வகையில் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

பாடசாலையின் சஞ்சிகை வெளியீட்டு முயற்சியானது மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துக்கள் கூறி இச் சஞ்சிகைக்கு ஒத்துழைப்பு வழங்கிய மாணவர்கள், மாணவர் பாராளுமன்ற புத்தாக்கக் குழு உறுப்பினர்கள், மற்றும் சஞ்சிகைக் குழு அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

மேலும் இச் சஞ்சிகை தொடர்ந்து கிரமமாக வெளிவர வேண்டும் என வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. எஸ். மனோகரன்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

தி / கிண் / ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தின் கேணிச்சுடர் இதழ் - 02 சஞ்சிகை வெளியீட்டை முன்னிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இச் சஞ்சிகையின் இதழ் - 01 ஆனது ஆரம்ப பிரிவு மாணவர்களின் சிறந்த ஆக்கங்களைத் தாங்கி நின்றமை குறிப்பிடத்தக்கது. இதழ் - 02 சஞ்சிகையானது பாடசாலை மாணவர் பாராளுமன்ற புத்தாக்க அமைச்சின் முதற்கட்ட முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ளது என்பது பெருமகிழ்ச்சிக்குரிய விடயமே.

கேணிச்சுடர் சஞ்சிகை வெளியீடானது மாணவர்களுடைய ஆக்கத்திறன்களையும், சிந்தனை ஆற்றல்களையும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளையும் வெளிக்கொண்டு வரும் என்பதில் ஐயமில்லை. மாணவச் செல்வங்களின் திறமைகள் வளர்ச்சியடைவதுடன் அவர்களின் வளர்ச்சியினூடாக பாடசாலையின் வளர்ச்சி வெளிக்காட்டப்பட வேண்டும் என்றும் கூறி கேணிச்சுடர் சஞ்சிகைக் குழுவிற்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.Z.M.M.நளீம்
வலயக்கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலய முதல்வர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சியின் வெளிப்பாடாக மாணவர்களின் ஆக்கங்கள் சஞ்சிகையூடாக வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச்சஞ்சிகையானது கடந்த வருடம் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்திருந்தது. இவ்வருடம் இரண்டாவது சுடராக கீழ் வகுப்பு மட்டுமன்றி மேல் வகுப்பு மாணவர்களது ஆக்கங்களையும் தாங்கி வெளி வருவது சிறப்பானதே, எதிர் வரும் ஆண்டுகளிலும் இன்னும் சிறப்புற எனது ஆசிகள் உரித்தாகட்டும்.

வாசிப்பும், எழுத்தும் சிந்தனை ஆற்றலைத் தூண்டத்தக்கது. சிந்திப்பதை எழுத்துருப்படுத்தும் போதே அது மற்றவர்களின் கருத்திற் கொள்ளப்படுகின்றது. எல்லா மனிதனும் சிந்திக்கின்றவன் சிறந்த கருத்துக்கள் அவனிடமும் உள்ளன. ஆனால் அது எழுத்துருப் பெறாததால் பிறரைச் சென்றடைவதில்லை. எழுத்துருப் பெறுமானால் சிறப்புப் பெறும்.

மாணவப் பருவத்தில் வாசிப்பு சிறந்த கல்விக்கு வித்திடுகின்றது அறிவுச் சமூகத்திற்கு வாசிப்பு மிக முக்கியமானதாகும். இந்த வகையில் இச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கிய மாணவர்களைப் பாராட்டுவதோடு அழகாக ஒழுங்குப்படுத்திய சஞ்சிகைக் குழுவுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

அதே போல் இச்சஞ்சிகையை வெளியிடுவதற்கான நிதி உதவியை நாடிய போது எதுவித தயக்கமும் காட்டாது திரு. திருமதி. ஆனந்தி ரவிக்குமார் அவர்கள் சஞ்சிகைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்கள் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

திரு. நா. காளிராசா
அதிபர்
தி/கிண்/ஆலங்கேணி விநாயகர்
மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

எம் மண்ணில் மணம் பரப்பும் எத்தனையோ புத்தி ஜீவிகளை உருவாக்கிய பெருமைக்குரிய எமது பாடசாலையான ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயம் அண்மைய ஆண்டுகளில் வருடம் தோறும் கேணிச்சுடர் சஞ்சிகையை வெளியிடுவது யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் இவ்வருடமும் இதழ் - 02 வெளியிடப்படுவதையிட்டு பேருவகை அடைகின்றேன். மேலும் மாணவர்களுடைய வகுப்பறைக் கல்வியுடன் மட்டும் விட்டுவிடாது அவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாடுகளை வெளிக்கொணர்ந்து, வளர்த்துவிடுவதோடு அதனை ஏனையோரும் அறிய சந்தர்ப்பத்தை வழங்கி மேலும் அவற்றினை ஆவணப்படுத்தும் சான்றாக இச் சஞ்சிகை அமைகின்றது என்றால் அது மிகையாகாது.

இச்சஞ்சிகை வெளியீட்டிற்காக முன்வந்து உழைத்த மாணவச் செல்வங்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக்கொள்வதுடன், இம்மலரானது இனிவரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து இதழ் விரிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. நி. பவளசிங்கம்
பிரதி அதிபர்
தி/கிண்/ஆலங்கேணி விநாயகர்
மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாப் பிரதேசத்தில் தி/கிண்/ ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தினுடைய மாணவர் பாராளுமன்றத்தின் புத்தாக்க அமைச்சின் செயற்திட்டத்தின் கீழ் கேணிச்சுடர் - 02 சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. மேலும் எமது பாடசாலை அதிபரின் வழிகாட்டலின் கீழும் ஏனைய சக ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் ஒத்துழைப்புடனேயே தொடர்ச்சியாக கேணிச்சுடர் இதழ் - 02 வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றோம்.

எம் சிறார்களின் எண்ணக்கருவூலங்களையும், திறமைகளையும் வெளிக் கொணர்கின்ற எமது பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் தரத்தைக் காட்டுகின்ற ஆவணங்களில் ஒன்றாகவே நாம் இதைப் பார்க்கின்றோம்.

மேலும் ஒரு மலருக்குரிய கவிதை, கட்டுரை, சிறுகதை, துணுக்குகள், பொது அறிவுத் தகவல்கள், என்பனவற்றைத் தாங்கி விரலுக்குத்தக்க வீக்கம் போன்று கேணிச்சுடர் வெளிவந்துள்ளது. கேணிச்சுடரின் வருகையை அன்போடும் உரிமையோடும் உங்கள் கரங்களில் தவழவிடுகின்றோம்.

-சஞ்சிகைக் குழு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகைக் குழு

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. | நா. | காளிராசா |
| 02. | திருமதி. | நி. | பவளசிங்கம் |
| 03. | திருமதி. | உ. | ஹம்சானந்தி |
| 04. | திருமதி. | ந. | பாத்திமா நிஸானி |
| 05. | திருமதி. | ம. | சந்திரகாந்தன் |
| 06. | திருமதி. | சு. | நவாஸ்கரன் |
| 07. | திரு. | ம. | உமாசங்கர் |
| 08. | திரு. | கி. | கிஷாந்தன் |
| 09. | திருமதி. | சி. | கோபிராஜ் |
| 10. | செல்வி. | கௌ. | ஈஸ்வரகௌரி |

## மாணவர் பாராளுமன்ற புத்தாக்க அமைச்சு உறுப்பினர்கள்

- ர. நிரோ (அமைச்சர்)
- பி. டிவேஸ்கர் (பிரதி அமைச்சர்)
- ஜ. ஜீவிர்த்தன்
- சு. சியேனி
- ரு. சுஞ்சய்
- த. தனுசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| உள்ளடக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 01. | இதழ் இரண்டு மலர்கிறது..... | 01 |
| 02. | நீரின் முக்கித்துவம் | 02 |
| 03. | விடுகதைகள் | 03 |
| 04. | அழுத வெங்காயம் | 04 |
| 05. | புதிய சிந்தனைக் கதவு...... | 04 |
| 06. | துப்பறிந்த துணுக்குகள் | 05 |
| 07. | உங்களுக்குத் தெரியுமா? | 06 |
| 08. | My Hobby | 07 |
| 09. | ஐம்பெரும் காப்பியங்கள் | 07 |
| 10. | சித்த மருத்துவக் குறிப்புக்கள் | 08 |
| 11. | மன்னர்களும் கட்டுவித்த குளங்களும், கால்வாய்களும் | 09 |
| 12. | சர்வதேச குறியீடுகள் | 09 |
| 13. | ஆயகலைகள் | 10 |
| 14. | தகவல்கள் தொழில்நுட்ப வளர்ச்சியும் மாணவர் கல்வியும் | 11 |
| 15. | நீர்வீழ்ச்சிகளும் அமைந்துள்ள நதிகளும் | 13 |
| 16. | குருபற்றிய பாடல்..... | 13 |
| 17. | தெரிந்து கொள்ளுங்கள் | 14 |
| 18. | முயற்சி | 15 |
| 19. | கீரை | 16 |
| 20. | தாய்..... | 16 |
| 21. | மாணவர்களின் சிந்தனைக்கு | 17 |
| 22. | முதுமையின் கொடுமை..... | 18 |
| 23. | எமது இனிய மொழி தாய்மொழி..... | 19 |
| 24. | எறும்புகள் | 19 |
| 25. | நாமும் அறிவோம் | 20 |
| 26. | தேடியறிந்த பொக்கிசங்கள் | 21 |
| 27. | உயரமான சிகரங்கள் | 22 |
| 28. | விலங்கின விநோதங்கள் | 23 |
| 29. | மருத்துவமும் மனித உடல் பற்றிய தகவல்களும் | 24 |
| 30. | முத்தமிழ்..... | 25 |
| 31. | பாடல்..... | 25 |
| 32. | Pleasure | 26 |
| 33. | பொது அறிவுப்பகுதி | 27 |
| 34. | நாடுகளின் சிறப்பு | 27 |
| 35. | மொழிகளும் எழுத்துக்களும் | 27 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 36. | போராட்டம்..... | 28 |
| 37. | கணினி உலகில் மைக்ரோ சொப்டின் தலைவர் | 29 |
| 38. | விண்வெளித் தகவல்கள் | 31 |
| 39. | சிந்திக்க வைக்கும் சில துளிகள் | 32 |
| 40. | பாட்டி வைத்தியம் | 33 |
| 41. | அழகியற் தகவல்கள் | 34 |
| 42. | வல்லாரை | 35 |
| 43. | மழையின் மகிமை | 36 |
| 44. | நாகரிகத்தின் அடையாளச் சின்னங்கள்..... | 37 |
| 45. | பழங்களை உண்பதால் எமக்கு கிடைக்கும் நன்மைகள் | 38 |
| 46. | சூரிய மண்டலம் | 39 |
| 47. | ஒத்த கருத்துச் சொற்கள் | 39 |
| 48. | இந்திர ஜால எண் | 40 |
| 49. | My Sweet Garden | 40 |
| 50. | வறுமை | 41 |
| 51. | சுருக்கக் குறியீடுகளும் விரிவாக்கங்களும் | 42 |
| 52. | பொது அறிவு | 43 |
| 53. | பாடல்..... | 44 |
| 54. | பலன் தரும் குறிப்புக்கள் | 45 |
| 55. | முயற்சி தந்த வெற்றி | 46 |
| 56. | பெண்களின் ஏழு பருவங்கள் | 47 |
| 57. | எண்களை அறிவோம் | 47 |
| 58. | புகைத்தல், மது பாவனையிலிருந்து எதிர்கால சந்ததியைப் பாதுகாப்போம் | 48 |
| 59. | மழை..... | 50 |
| 60. | கல்வி பற்றி..... | 51 |
| 61. | முயற்சி | 52 |
| 62. | புரியாத புதிருக்கு விடை | 53 |
| 63. | இதயம் ஒரு கோயில்..... | 54 |
| 64. | பாரதியார்..... | 55 |
| 65. | வாழ்க்கையில் தெரிய வேண்டியவை | 55 |
| 66. | தத்துவங்கள் | 56 |
| 67. | சைவ விழுமியப்பண்புகள் | 57 |
| 68. | நம்பிக்கையில் புதிய பாதை | 58 |
| 69. | மரத்தில் பூக்காத பூக்கள் | 59 |
| 70. | வீதி விபத்துக்கள் பற்றி..... | 60 |
| 71. | இவனே மனிதன்..... | 60 |
| 72. | உனக்கும் ஓர் நாள்..... | 61 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 73. | ஆங்கில மொழியின் அவசியம் | 62 |
| 74. | விதி..... | 63 |
| 75. | Give me Five | 63 |
| 76. | அரும்பதம் | 64 |
| 77. | ஆயுதம்..... | 64 |
| 78. | வாழ்க்கைக்கான சில வைர வரிகள் | 65 |
| 79. | School என்ற ஆறு எழுத்து சொல்லிற்கு விளக்கம் தெரியுமா? | 66 |
| 80. | ஆசிரியர் மகிமை..... | 66 |
| 81. | அழகு..... | 67 |
| 82. | நற்பழக்கங்கள்..... | 67 |
| 83. | விழாக்கள் | 68 |
| 84. | புறாவைப்பற்றி தெரிந்து கொள்வோம் | 68 |
| 85. | தாவரங்கள் பற்றிய பொது அறிவு | 69 |
| 86. | ஆறுகளின் பழைய பெயர்களும் இன்றைய பெயர்களும் | 70 |
| 87. | ஆதவன்..... | 70 |
| 88. | கற்றுக்கொள்..... | 71 |
| 89. | மாணவர்களுக்கு அறிவுரை | 71 |
| 90. | நீடூழி நீ வாழ வாழ்த்துக்கின்றேன் | 72 |
| 91. | அறிந்து கொள்வோம் | 73 |
| 92. | உப்பு பற்றிய அரிய சில தகவல்கள் | 74 |
| 93. | நேரம்..... | 75 |
| 94. | விடுகதைகள் | 76 |
| 95. | விவசாயி..... | 77 |
| 96. | கவிஞன்..... | 77 |
| 97. | பாப்பாவுக்கு ஒரு பாடல்..... | 78 |
| 98. | மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் | 79 |
| 99. | யுத்தம் வேண்டாம்..... | 80 |
| 100. | மறவாதே..... | 80 |
| 101. | பூமியைக் காப்பாற்றுவோம் | 81 |
| 102. | கர்வம் எப்படி உருவாகின்றது | 82 |
| 103. | விஞ்ஞான பரிசோதனைகள் | 83 |
| 104. | அனர்த்தங்களும் அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் வழிகளும் | 84 |
| 105. | உணவு | 85 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் இரண்டு மலர்கிறது

விநாயகர் பெயரைத் தாங்கும்
வித்தியா சாலை தன்னில்
கேணியின் பெயர் பூத்த
கேணிச் சுடர் தனிலே
பூத்ததுவோ முதற் பூ ஒன்று
போன வருடமதில்
இவ்வாண்டில் அதையடுத்து
இதழிரண்டு மலர்கிறது!

பாலகரின் ஆக்கங்கள்
பதித்த இதழ் மட்டுமன்றி
மேல் வகுப்பு மாணவரின்
மேன்மையுறு ஆக்கமதை
தாங்கியே வருகிறது
தரணியிலே இதழிரண்டு
படித்துப் பயன் பெற்றிடலாம்.
பண்புடனே வாழ்ந்திடலாம்!

கலை வளர்த்த சான்றோர்கள்
காத்து வந்த கேணியிது
புகழ் பூத்த மண் பெருமை
பூக்கும் இதழ் தர வேண்டும்
காலம் காலமாய் நாம்
கற்றுவந்த கலைக்கூடம்
கேணியதன் சுடராலே
ஒளி கண்டு மிளிரட்டும்

எதிர்காலம் இதுபோன்ற
எத்தனையோ சுடர் தோன்றி
எம்மவரின் திறமைகளை
எடுத்தியம்பச் செய்திடனும்
வாழ்கவே கேணிச் சுடர்
வளர்கவே கலை என்றும்
மலர்கவே இதழ்கள் பல
மான்புறட்டும் கலைக்கூடம்!

செல்வி. யோ. பிரித்தியா
தரம் – 11A



**நீ சிரித்துப் பார் உன் முகம்**
**உனக்குப் பிடிக்கும்**
**மற்றவர்களை சிரிக்க**
**வைத்துப் பார் உன் முகம்**
**எல்லோருக்கும் பிடிக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரின் முக்கியத்துவம்



1. இது நாம் உண்ணும் உணவை சமிபாடடையச் செய்கிறது.

2. நீர் விவசாயத்திற்கும் தாவரத்தின் உயிர் வாழ்க்கைக்கும் அத்தியாவசியமானதாகும்.

3. நீர் எமக்கு பொதுவாக குளிப்பதற்கும், குடிப்பதற்கும் ஆடைகள், பாத்திரங்கள் போன்றவற்றை கழுவுவதற்கும் உதவுகின்றது.

4. அத்தோடு மனிதன் நீரில்லாமல் உயிர் வாழ முடியாது.

5. நீரை நாம் மாசுபடுத்தாமல் பாதுகாக்க வேண்டும். அத்தோடு நீர் வீண்விரயமாவதைத் தடுக்க வேண்டும்.

6. நீரினுள் நாம் குப்பைகளைக் கொட்டக் கூடாது கழிவு நீர் கலக்க விடக் கூடாது.

பாதுகாப்போம் ஒவ்வொரு நீர்த்துளியையும் நமது உயிர் போல...
எதிர்கால சந்ததிக்காக...

செல்வி. தே.தனஞ்சை
தரம் – 08





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

01. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?

02. தொடலாம் ஆனால் பிடிக்க முடியாது அது என்ன?

03. ஒற்றை கிணத்துக்குள் இரட்டைத் தைலங்கள் அது என்ன?

04. எட்டாத ராணி இரவில் வருவாள், பகலில் மறைவாள் அவள் யார்?

05. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான் அவன் யார்?

06. தம்பியின் தொப்பியே அவனுக்கு நெருப்பு அது என்ன?

07. வலை பின்னும் ஆனால் அதனிடம் நூலில்லை அது என்ன?

08. ஒற்றைக்கால் மனிதனுக்கு பல கைகள் அவன் யார்?

09. வாலால் நீர் குடிக்கும் வெளிச்சத்திலே தான் இருக்கும் அது என்ன?

10. அருந்த முடியாத பால், உலகம் சுற்றும் பால் அது என்ன?

# விடைகள்

01. சாமரம்

02. தண்ணீர்

03. முட்டை

04. நிலா

05. தொலைபேசி

06. தீக்குச்சி

07. சிலந்தி

08. மரம்

09. விளக்கு

10. தபால்

செல்வி. கௌ. சர்ஜிகா
தரம் - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத வெங்காயம்



வெங்காயமும், தக்காளியும், கத்தரியும் நல்ல நண்பர்கள். மூன்று பேரும் ஒரு நாள் கோவிலுக்குச் சென்றனர். ஆட்டோவில் அடிபட்டு கத்தரியும், தக்காளியும் இறந்துவிட வெங்காயம் துக்கம் தாங்காது அழுதது. இதைப் பார்த்து இரக்கப்பட்ட இறைவன் வெங்காயத்தின் முன் தோன்றி ஏன் அழுகின்றாய்? என்று கேட்டார். நான் இறந்தால் எனக்கு யார் இருக்கிறார்கள் அது தான் கவலையில் அழுகின்றேன் என்றது வெங்காயம். இறைவன் இரக்கப்பட்டு நீ இறந்தால் எல்லோருமே அழுவார்கள் என்று வரம் கொடுத்துச் சென்றார். அதனால் தான் வெங்காயத்தால் எல்லோரும் அழுகிறோம் இன்று வரை.

செல்வி. க. நிதுஸ்ரிக்கா
தரம் - 4

# புதிய சிந்தனைக் கதவு

புதிய ஆண்டில் புதிய சிந்தனையுடன்,
நாம் செல்லும் பாதையிலேயே
கல்வியில் சிறந்திட, இலட்சியங்கள் ஈடேற
நிறுத்திடுவோம் எம் நினைவினிலே.

புதுவாழ்வு பெற்றிடவே, புதிய நம்பிக்கையுடன்,
புதிய உறவுகளுடன், புதிய பாதையில் சென்று,
புதிய வாழ்வை நோக்கி உயர்ந்திடுவோம்.

அடுப்பங்கரையில் – நாம் அடங்கிக்கிடந்தாலும்
எதிர்காலம் நமக்காக என்ற புதிய நம்பிக்கையுடன்,
வெளி உலகைக் காண விரைந்திடுவோம்!

செல்வி. கே. ஸாமினி
தரம் - 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பறிந்த துணுக்குகள்

- உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியம் முழுக்க இடக்கையால் வரையப்பட்ட ஓவியமாகும். இது மரப்பலகையில் வரையப்பட்ட ஓவியமாகும். இதை வரைந்த லியானோடோடாவின்ஸி இடக்கை பழக்கமுடையவர் ஆவார்.

- மனித உடலிலேயே மிகவும் குளிர்ச்சியான பாகம் எது என்றால் மூக்கின் நுனி தான். மூக்கின் உஷ்ண நிலை 70 DFH.

- ஒரு சாதாரண பென்சிலைப் பயன்படுத்தி 48km நீளத்திற்குக் கோடு போட முடியும். விண்வெளி வீரர்கள் எழுதுவதற்கு இன்றுவரை பயன்படுத்துவது பென்சில் தான்.

- இஸ்ரேலில் இளம் பெண்கள் இராணுவத்தில் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் சேவை செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

- சீனாவில் பெண்கள் செருப்பைக் காட்டினால், ஆண்களின் காதலுக்குப் பச்சைக்கொடி காட்டியதாக அர்த்தம் கொள்ளப்படும்.

- உலகில் 15000 வகையான அரிசி வகைகள் உள்ளன.

- 35 Oscar விருதுகளைப் பெற்ற ஒரே மனிதர் வோல்ட் டிஸ்னி.

- இங்கிலாந்தில் அல்லிப் பூக்களைப் பரிசாகக் கொடுக்ககூடாது. அங்கே அல்லிப்பூக்கள் இறந்தவர்களின் இறுதி ஊர்வலத்திற்கு மட்டும் தான் கொடுப்பது.

- எறும்புகள் தங்கள் வாழ்நாளில் தூங்குவதே இல்லை.

செல்வி. ம. கிரிஷ்ரிகா
தரம் - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா?

1. சங்ககாலத்தில் கறையானுக்கு வழங்கப்பட்ட பெயர் என்ன?
   - வன்மீகம்

2. உலகிலேயே அதிக முட்டையிடும் உயிரினம் எது?
   - கறையான்

3. ஐரோப்பாக் கண்டத்தில் ஏழ்மையான நாடு எது?
   - அல்பேனியா

4. திருக்குறளில் எந்த அதிகாரம் இரண்டு முறை வருகிறது?
   - குறிப்பறிதல்

5. இந்தியாவின் தேசிய மரம் எது?
   - ஆலமரம்

6. தமிழில் வெளிவந்த முதல் பத்திரிகை எது?
   - சிலோன் கெஜட்

7. இலங்கையில் தமிழில் வெளிவந்த முதல் செய்தித்தாள் எது?
   - சுதேசமித்திரன்

8. சீனர்களின் புனித விலங்கு எது?
   - பன்றி

செல்வன். வ. ரிஷப்தன்
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Hobby



- My hobby is gardening.
- It is very interesting and useful hobby.
- I have a beautiful garden behind of my house.
- There are vegetable plants, Fruit plants and flower plants in my garden.
- Birds and butterflies come to this garden every day.
- I grow brinjal, pumpkin, cabbage and leaks as vegetables and I grow Sunflower, Rose and Jasmine as flowers.

Gardening Is Good Exercise also.

Miss. J. Sangavi
Grade - 09

## ஐம்பெரும் காப்பியங்கள்

சிலப்பதிகாரம்
மணிமேகலை
சீவகசிந்தாமணி
குண்டலகேசி
வளையாபதி

செல்வி. ஞா. விதுர்சிக்கா
தரம் - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த (இயற்கை) மருத்துவக் குறிப்புகள்

## – கற்றுத் தெரிந்தது –

### சளி குறைய

➢ பூண்டு, தக்காளி, வெங்காயம் ஆகியவற்றை நன்றாக நசுக்கி தண்ணீர் விட்டு வேகவைத்து சூப் செய்து சாப்பிட்டு வந்தால் சளி குறையும்.

➢ வெற்றிலையை இடித்துச் சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த சாற்றைக் கொதிக்க வைத்து பின்பு ஆற வைத்து நெற்றிப் பகுதியில் பற்றுப் போட்டு வந்தால் சளி குறையும்.

➢ சுக்கு கொத்தமல்லி விதை இரண்டையும் தண்ணீர் விட்டு காய்ச்சி அந்த தண்ணீரை லேசான சூட்டில் சாப்பிட்டு வந்தால் வெயில் காலங்களில் ஏற்படும் சளி குறையும்.

➢ தூதுவளைச் சாற்றையும் பசு நெய்யையும் ஒன்றாக கலந்து கோஷ்டம் பொடியை அதனுடன் சேர்த்து குழைத்து இரண்டு பாகமாக்கி வேளைக்கு ஒரு பாகமாகக் காலை, மாலை என சாப்பிட்டு வந்தால் சளி குறையும்.

➢ தூதுவளைச் சாறு, துளசி இலைச்சாறு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வந்தால் ஓயாத சளி குறையும்.

செல்வன். ச. தருண்
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னர்களும் கட்டுவித்த குளங்களும் கால்வாய்களும்

1. மகாசேனன் - மின்னேரியா
2. பராக்கிரமபாகு - பராக்கிரம சமுத்திரம்
3. தேவநம்பியதீசன் - திஸ்ஸவாவி
4. தாதுசேனன் - கலாவாவி
5. வசபன் - மகாவிலச்சியக்குளம்
6. 2ம் முகலன் - பதவிக்குளம்
7. துட்டகைமுனு - சொரபொரவாவி
8. பண்டுகாபயன் - அபயவாவி, காமினி வாவி, ஜயவாவி
9. குளக்கோட்டன் - கந்தாய்க்குளம்

செல்வி. ச.ஷெதுசியா
தரம் - 06

# சர்வதேச குறியீடுகள்

| குறியீடுகள் | | விளக்கம் |
|---|---|---|
| வெண்புறா | :- | அமைதி/ சமாதானம் |
| ஒலிவ் மரத்தின் இலை | :- | சமாதானம் |
| மஞ்சட்கொடி | :- | தொற்று நோய் |
| கறுப்புக்கொடி | :- | மரணம்/துக்கம் |
| சிவப்புக் கொடி | :- | உலகத்தொழிலாளர் அமைப்பு |
| சிவப்புச் சக்கரம் | :- | வளர்ச்சி |
| தீப்பந்தம் | :- | ஒலிம்பிக் |
| செஞ்சிலுவை | :- | மருத்துவ உதவி |
| உடைந்த கை விலங்குடன் இரு கை | :- | விடுதலை |
| சிவப்பு முக்கோணம் | :- | குடும்பக் கட்டுப்பாடு |

செல்வன். வி.விதுசன்
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயகலைகள்

| | | |
|---|---|---|
| ♦ அக்கிரவிலக்கணம் | - | எழுத்துக் கூட்டும் பயிற்சி |
| ♦ இலிகிதம் | - | கை எழுத்துப் பயிற்சி |
| ♦ கணிதம் | - | எண்பயிற்சி |
| ♦ வேதம் | - | இந்துநெறி |
| ♦ புராணம் | - | இந்துக்கடவுளின் வரலாறு |
| ♦ வியாகரணம் | - | இலக்கம் |
| ♦ நீதி சாஸ்திரம் | - | நீதி அறிவுத்திறன் |
| ♦ சோதிட சாஸ்திரம் | - | சோதிடத் திறன் |
| ♦ தருமசாஸ்திரம் | - | சட்டத்திறன் |
| ♦ யோகசாஸ்திரம் | - | தேகத்தின் நடைமுறைப்பயிற்சி |
| ♦ மந்திர சாஸ்திரம் | - | வேதத்தின் நடைமுறைப்பயிற்சி |
| ♦ சகுன சாஸ்திரம் | - | சகுனநமித்தம் அறிதல் |
| ♦ சிற்ப சாஸ்திரம் | - | சிலை அமைக்கும் சாஸ்திரம் |
| ♦ வைத்திய சாஸ்திரம் | - | மருந்துகள் நோய்கள் பற்றியஅறிவு |
| ♦ உருவ சாஸ்திரம் | - | உருவத்தால் அறிதல் |

செல்வி. இ. டிலுக்ஷா
தரம் - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் இன்றைய யுகத்தின் மனித மேம்பாடானது அசுரவேகத்தில் சென்று கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். ஆதி மனிதன் கல்லைக் கண்டான் ஆனால் இன்றைய மனிதன் அனைத்தையும் கண்டுபிடித்து விண்ணிலே தனியிடம் தேடுகின்றான். இத்தகைய மனித மேம்பாட்டால் வளர்ச்சியடைந்ததே தகவல் தொழிநுட்பம். அன்றைய நிலைக்கும், இன்றைய நிலைக்கும் எத்தனை வித்தியாசங்கள்! எத்தனை வேறுபாடுகள்! இதற்கெல்லாம் காரணம் என்ன? மனிதனின் சிந்தனை வளர்ச்சியும், ஆராய்கின்ற பாங்கும், அறிவு வளர்ச்சியும் தான் காரணமாகின்றன. அன்று பறையடித்தல், தீ மூட்டுதல், தூது அனுப்புதல் எனத் தகவல்களை பரிமாறிய மனிதன், தொழிநுட்ப வளர்ச்சியால் பல விந்தைகளை நிகழ்த்துகின்றான் இன்றைய நவீன யுகத்தில் தகவல் தொழிநுட்ப வளர்ச்சியானது மாணவர் கல்வியில் இன்றியமையாததாக விளங்குகின்றது.

# தகவல் தொழிநுட்ப வளர்ச்சியும் மாணவர் கல்வியும்

தொழிநுட்ப வளர்ச்சியால் விழிகளை உயர்த்திப்பார்க்க வைத்த அரிய கண்டுபிடிப்பு 'Television' எனப்படும் தொலைக்காட்சி ஆகும். இதன் மூலம் வீட்டில் இருந்தவாறே விரும்பிய நிகழ்ச்சியை நேரடியாக கண்டு களிக்க முடிகின்றது. இசைநிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்வதன் மூலம் மாணவர்களின் கலைத்திறன் வளர்க்கப்படுகின்றது. நகர்ப்புற மக்களின் திறமைகளையும், ஆற்றல்களையும், சாதனைகளையும், தொலைக்காட்சியிலே ஒளிபரப்புவதனால் கிராமப்புற மக்களும், மாணவர்களாகிய நாமும் சாதிக்க வேண்டும் என்ற மனப்பான்மை சுடர்விட்டு பிரகாசிக்கின்றது. பரீட்சையை எதிர்நோக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களையும் தொலைக்காட்சி வழியாகக் கூறுவதனால் மாணவர்களுக்கு பரீட்சையின் மீதான பீதி அற்றுப் போகின்றது. பரீட்சை இலகுபடுத்தப்படுகின்றது. இவ்வாறு மாணவர்கள் பல்வேறுபட்ட பயன்களை பெற்றுக்கொள்கின்றனர்.

இன்றைய உலகையே மாற்றியமைத்துக் கொண்டு இருக்கும் தொழிநுட்ப சாதனமாய்த் திகழ்வது கணினி ஆகும். கணினியின் மூலம் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் இலகுபடுத்தப்படுகின்றன. மாணவர்கள் தமக்குத் தேவையான கட்டுரைகள், நூல்கள், அறிவுசார் தகவல்கள் என அனைத்தையும் மும்மொழி மூலத்திலும் கணினியிலே பெற்றுக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையமானது கணினியிலே புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஓர் விடயம். இத்தகைய இணையமானது உலகையே ஆக்கிரமித்து அதை குக்கிராமமாக மாற்றிவிட்டது. அந்த வகையிலே கணினியானது மாணவர் கல்வியிலே பாரிய திருப்பு முனையை ஏற்படுத்தி சிறந்த ஊடகமாக பொலிவுடன் திகழ்கின்றது.

கிணற்றுத்தவளை போல உலக விடயங்களை அறியாது குறுகிய மனப்பாங்கோடு வாழ்ந்து வந்த மக்கள் விழித்தெழுந்தார்கள். மத்திய காலத்தில் கண்டுபிடிப்புக்களை நிகழ்த்த ஆரம்பித்தனர். ஜேர்மனியில் மெயின்ஸ் நகரில் ஜொஹன்னஸ் கூட்டன்பேர்க் அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தார். அன்று தொடக்கம் உலகளாவிய ரீதியில் பத்திரிகைகள் சஞ்சிகைகள், நூல்கள், கவிதைகள், கதைகள் அறிவுசார் தகவல்கள் என அனைத்தையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இன்றைய மாணவர்களுக்கு பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பவற்றை இணையத்தின் மூலமாக பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிட்டி விட்டது. எனவே மாணவர்களின் கல்வி வளர்ச்சியை தூண்டும் அறிவியல் ஆற்றலை மேம்படுத்தும் வகையாகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் விளங்குகின்றன.

எந்தவொரு சாதனமோ, பொருட்களோ நூறு சதவீத நன்மையை தருவன எனக் கூறமுடியாது. தகவல் தொழிநுட்ப வளர்ச்சியால் உருவான சாதனங்களான கணினியின் மூலம் மாணவர்களின் வாசிப்புத்திறனும், மொழித்திறனும் குறைவடைகின்றன. தொலைபேசிகளை தவறாகப் பயன்படுத்துவதால் பல்வேறு தீமைகளும் ஏற்பட்ட வண்ணமே உள்ளன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலே தொடர்நாடகங்கள், திரைப்படங்கள் என்பவற்றால் மாணவர்கள் திசை திருப்பப்படுகின்றனர்.

***"பல்வேறு நன்மைகளையும் ஒரு சில தீமைகளையும் விளைவிக்கும் தகவல் தொழிநுட்ப வளர்ச்சியிலே அன்னப்பறவை போல தீமையை விடுத்து நன்மைகளை மட்டும் தேர்வு செய்து சிறந்தவராக வாழ்வோம்."***

செல்வன். அ.விதுர்சனன்
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வீழ்ச்சிகளும் அமைந்துள்ள நதிகளும்

| | |
|---|---|
| பம்பரகந்த | - கிருந்தி ஓயா |
| தியலும | - கிருந்தி ஓயா |
| ரம்பொட | - மகாவலி கங்கை |
| டெவோன் | - மகாவலி கங்கை |
| துன்கிந்த | - மகாவலி கங்கை |
| எல்பின் | - மகாவலி கங்கை |
| லக்சபான | - களனி கங்கை |
| அபடீன் | - களனி கங்கை |
| கிரிந்தி எல்ல | - களுகங்கை |

செல்வி. க.வைஸ்ணவி
தரம்:06



# குரு பற்றிய பாடல்

எங்கள் குரு எங்கள் குரு
இவர் என்றும் நெஞ்சில் தங்கும் குரு
நல்ல நல்ல கல்வி தந்து - எம்மை
நாளும் உயர்த்தும் அன்புக் குரு
(எங்கள்)

அறியாமை கொண்டு நின்றோம் - அதை
அகற்றி அறிவொளி ஏற்றி விட்டீர்
அன்போடு எமை அழைத்து - நல்ல
ஆசி கூறி வாழ்த்தி வைப்பீர்.

அறிவோடு ஒழுக்கமதை
அள்ளி அள்ளித் தந்திடுவீர்
நெறியோடு நமை நடத்தி - நல்ல
நேர் வழியைக் காட்டிடுவீர்

கனிவோடு நாம் பயில - நல்ல
கல்வி தேடித் தந்திடுவீர்
துணையாக எம்முடனே வந்து
தோன்றும் கடமை தனை தான் முடிப்பீர்.

செல்வி. யு. நிலுசா
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள்

| | | |
|---|---|---|
| → சர்வதேச மகளிர் தினம் | – | மார்ச் 03 |
| → சர்வதேச குடிநீர் தினம் | – | மார்ச் 27 |
| → சர்வதேச சுகாதார தினம் | – | ஏப்ரல் 07 |
| → சர்வதேச புத்தக தினம் | – | ஏப்ரல் 23 |
| → சர்வதேச தொழிலாளர் தினம் | – | மே 01 |
| → சர்வதேச செஞ்சிலுவைச் செம்பிறை தினம் | – | மே 08 |
| → சர்வதேச குடும்ப நலன் தினம் | – | மே 15 |
| → சர்வதேச புகையிரத தினம் | – | மே 31 |
| → சர்வதேச சுற்றுச்சூழல் தினம் | – | யூன் 05 |
| → சர்வதேச போதைமருந்து தினம் | – | யூன் 26 |
| → சர்வதேச சனத்தொகை தினம் | – | யூலை 11 |
| → சர்வதேச அகதிகள் தினம் | – | யூலை 28 |
| → சர்வதேச எழுத்தறிவு தினம் | – | செப்ரம்பர் 08 |
| → சர்வதேச சிறுவர் தினம் | – | ஒக்டோபர் 01 |
| → சர்வதேச வயோதிபர் தினம் | – | ஒக்டோபர் 02 |
| → சர்வதேச ஆசிரியர் தினம் | – | ஒக்டோபர் 05 |
| → சர்வதேச விழிப்புலனற்றோர் தினம் | – | ஒக்டோபர் 15 |
| → சர்வதேச உணவு தினம் | – | ஒக்டோபர் 16 |
| → சர்வதேச எயிட்ஸ் தினம் | – | டிசம்பர் 01 |

செல்வி. பி. ஹம்சிக்கா
தரம் - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

முயற்சி என்றால் நாம் ஒரு காரியத்தை எடுத்தோமானால் அந்த காரியத்தில் வெற்றி எனும் இலக்கை அடையும் வரை முயற்சி எனப்படும். அரிய செயல்கள் அனைத்தும் விடா முயற்சியாலேயே அடையப் பெற்றுள்ளன. வெறும் வலிமையால் மட்டும் அல்ல.


பொதுவாக வெற்றி என்பது மற்றவர்கள் கைவிட்ட பின்பு அயராமல் முயற்சி செய்வதாலேயே கிட்டுவதாகும். உதாரணமாக சிலந்திப் பூச்சி தன் வலையை பின்னுவதற்கு முயற்சி செய்து அதில் தோல்வியடைந்தது. ஆனால் சிலந்தி பூச்சி முயற்சியினை கைவிடாமல் தன் வலையினை பின்னி முடிக்கின்றது. இதனையும் ஒரு முயற்சி எனலாம்.

தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழை கண்டுப்பிடிப்பதற்காக 999 தடவை தோல்வியடைந்துள்ளார் ஆனால், அவர் விடாமுயற்சியை கைவிடாமல் ஆயிரம் ஆம் தடவையாக முயற்சி செய்து மின்குமிழைக் கண்டுபிடித்தார். இதனையும் ஒரு முயற்சி எனலாம்.

மாணவர்களே முயற்சியினை கைவிடாமல் வெற்றி எனும் இலக்கையடைந்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

நன்றி

செல்வி. கௌ. நிவேதா
தரம் - 08





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரை

அம்மா சமைக்கும் கீரை
அதிக சத்தாம் கீரை
பார்வைக்கு உதவும் கீரை
பசுமை மிக்க வல்லாரை



சின்னத் தண்டு கீரை
செழித்து வளரும் முளைக்கீரை
மலிவாய்க் கிடைக்கும் கீரை
மருத்துவ குணமுள்ளதாம் கீரை

செல்வன். சு.பிரேம்
தரம் - 02

# தாய்



நிலவோ வானில் உதிக்கும் ஆனால் நானோ
என் தாயின் வயிற்றில் உதித்தேன்

பூவிற்கு வாசம் துணை ஆனால் எனக்கு
என் தாயின் பாசம் துணை

பூமிக்கு துணைக் கோள் நிலா ஆனால் எனக்கு
துணை என் தாய்

வானிற்கு அழகு மேகம் எனக்கு அழகு
என் தாய்

வானில் மின்னும் ஒளி நட்சத்திரம் ஆனால்
என் வீட்டில் மின்னும் ஒளி என் தாய்

செல்வி. செ. தனுஸிகா
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் சிந்தனைக்கு

மிகவும் மதிப்புக்குரியவர்கள் - தாய், தந்தை

மிக பெரிய வெகுமதி - மன்னிப்பு

மிகவும் வேண்டியது - பணிவு

மிகவும் நல்ல நாள் - இன்று

மிகவும் வேண்டாதது - வெறுப்பு

மிகவும் சுலபமானது - குற்றம் காணல்

மிகப்பெரிய தேவை - நம்பிக்கை

மிகவும் கொடிய நோய் - பேராசை

ஒவ்வொரு நிமிடமும் இருக்க வேண்டியது - இறைபயம்

விலக்க வேண்டியது - சோம்பேறித்தனம்

செய்யக் கூடியது - உதவி

செய்யக் கூடாதது - நம்பிக்கைத் துரோகம்

நம்பக் கூடாதது - வதந்தி

தரமற்ற குணம் - பொறாமை

செல்வன். றொ. சிறிக்காந்
தரம் - 11B

ஓடாத நதியும் தேடாத மனமும் தெளிவு கொள்ளாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையின் கொடுமை

முடிகள் நரைப்பதும்
முதுகு வளைவதும்
முகத்தில் சுருக்கமும்
முதுமையின் அடையாளமா?
தடியொன்று கையில்
தளர்ந்த நடை யாவும்
முடிவடையும் வாழ்வின்
முத்திரைச் சின்னமா?

பார்வை மங்குவதும்
பாசத்தில் நிற்பதுவும்
போர்வைக்குள் சுருண்டு
பொழுதெல்லாம் தூங்குவதும்
பூர்வீகப் பெருமைகள்
புறங்காட்டி ஓடுவதும்
தார்மீக நீதியா?
தரணியரே கூறிடுவீர்

சொந்தத் தேவைகளை
சுயமே முடிக்க வியலாது
பந்தங்களை நாடி
பரிதாபமாய்க் கூடி
தந்த வாழ்நாளின்
தரவுகள் முடிந்த போது
வந்த வழி திரும்ப
விழிமூடும் வேளை வருமோ?



செல்வி. க. நிரோஜா
தரம் - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எமது இனிய மொழி தாய்மொழி

எனது உள்ளம் கவர்ந்த உயர்ந்த மொழி தமிழ் மொழி. உலகில் உள்ள மொழிகளுள் முதன்மையான மொழி தமிழ் மொழியே. தமிழ் மொழியே எனது முதற் தாய். நான் தமிழ் மொழியில் பேசுகின்றேன். என் வாயிலிருந்து வரும் தமிழ் மொழியானது என்னை வாழ வைக்கும் தெய்வம். எனது தமிழ் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கொண்டது.

"தமிழுக்கு அமுதென்று பெயர்" என பாரதியார் பாடினார். அதிகமான நாடுகளில் பேசப்படுகின்ற மொழி என்றால் அது தமிழ் மொழியே. பல நாடுகளிலும் தமிழ் மொழி பலராலும் விரும்பி பேசப்படுகின்றது. எனது தமிழ் மொழியானது தொன்மையும், பெருமை மிக்கதுமான மொழி ஆகும். எமது தாய் மொழியை வளர்ப்பது எமது முக்கிய கடமை ஆகும்.

செல்வி. ர.அனக்ஷயா
தரம் - 09

# எறும்புகள்



- எறும்புகளுக்கு கண்கள் மிகத் துல்லியமாகத் தெரியும்.
- உழைப்பதில் எறும்புகளுக்கு ஈடு இணை எதுவும் இல்லை.
- எறும்புகள் ஒன்றைப் பின்பற்றி ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லும் சுபாவமுடையவை.
- இவை கூட்டமாக வாழும் தன்மை கொண்ட உயிரினமாகும்.
- எறும்புகள் முட்டையிடும் வகையைச் சேர்ந்தவையாகும்.
- எறும்புகள் தோல் வழியாகவே சுவாசிக்கின்றன.
- இவற்றின் இரத்தம் நிறமற்றதாகும்.

செல்வி. கோ. அக்ஷயா
தரம் - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் அறிவோம்

❖ மகாபாரதத்தை ரஷ்ய மொழியில் மொழி பெயர்த்தவர்?
- போரிஸ் ஸ்மிர்னோவ்

❖ பார்ங் என்ற வார்த்தை எந்நாட்டு மொழிச்சொல்லாகும்?
- இத்தாலி

❖ உலக நாடுகள் தினம் எத்தனையாம் திகதி கொண்டாடப்படும்?
- மார்ச் 21ம் திகதி

❖ எம்பரர் பென்குயின் பறவை முட்டைகளை எதில் வைத்து பாதுகாக்கின்றது?
- பாதத்தில்

❖ உலகில் அதிகமான ஊழியர்களை கொண்ட துறை எது?
- இந்திய ரெயில்வேத் துறை

செல்வி. ச. கிசாலினி
தரம் - 09

**இன்பத்தை IN BOX இல் வை**

**கவலையை OUT BOX இல் வை**

**புன்னகையை SENT பண்ணு**

**கோபத்தை DELETE பண்ணு**

**வாழ்க்கை தானாக RINGING TONE ஆக மாறும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடி அறிந்த பொக்கிஷங்கள்


புகழ்ச்சியில் மகிழ்பவன் இகழ்ச்சியில் துன்பப்படுவான்
அன்பான வார்த்தைகள் விலைமதிப்பற்றவை
எண்ணங்களிலே மேகம் கவிந்திருக்கும் ஆனால்
கண்களிலே நீர் குவிந்திருக்கும்.

அன்பாகவும் பாசமாகவும் பேசுவதற்கு காசு
பணம் தேவையில்லை.
ஒருவருடைய ஒழுக்கம் என்பது முகம் பார்க்கும்
கண்ணாடியில் தெரிவதில்லை.

நாளை என்ற பொழுது இன்னும் சில மணித்துளிகளில்
நேற்றாகப் போய் விடும்
அன்பை எதிர்பார்க்காதீர்கள்
வாரி வழங்குங்கள்.

சந்தேகங்களை வளர்த்துக் கொள்வது மனதில்
நோய்களை வைத்துக் கொள்வது போன்று
ஒரு இல்லத்தில் சண்டை தொடங்கினால்
வீதியின் ஓரத்தில் சத்தம் கேட்கும்.

செல்வி. ச.திருஸாலினி
தரம் - 09





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரமான சிகரங்கள்

| | | |
|---|---|---|
| எவரெஸ்ட் | - | 29 ஆயிரத்து 28 அடி (நேபாளம்) |
| காட்வின் ஆஸ்டின் | - | 28ஆயிரத்து 250 அடி (இந்தியா) |
| கஞ்சன் ஜங்கா | - | 28 ஆயிரத்து 208 அடி (இந்தியா) |
| மகாலு | - | 27 ஆயிரத்து 824 அடி (நேபாளம்) |
| தளவகி | - | 26 ஆயிரத்து 810 அடி (நேபாளம்) |
| அக்கோனாக்குவா | - | 22 ஆயிரத்து 834 (அர் ஜென்டினா) |
| கிளிமஞ்சாரோ | - | 19 ஆயிரத்து 340 அடி (தான்சானியா) |
| மெயின் பிளாங் | - | 15 ஆயிரத்து 771 அடி |
| வின்சன் மாசில் | - | 16 ஆயிரத்து 867 அடி (அண்டார்டிகா) |
| குக் | - | 12 ஆயிரத்து 340 அடி (நியூசிலாந்து) |

செல்வி. ச. கவிப்பிரிதா
தரம் - 09





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கின விநோதங்கள்

01. மூளை இல்லாத மீன் இனம் எது?
    - நட்சத்திர மீன்

02. ஒரு வருடம் ஆணாகவும் ஒரு வருடம் பெண்ணாகவும் வாழும் உயிரினம்?
    - ஈரிதழ்ச் சிப்பி

03. மிகப்பெரிய வாயுள்ள உயிரினம் எது?
    - நீர் யானை

04. கருவுறாது முட்டை இடும் உயிரினம்?
    - குளவி

05. பதினொரு வாரங்கள் கழித்து கண் திறக்கும் விலங்கு எது?
    - பிளாடிபஸ்

06. எப்போதும் நீந்திக் கொண்டிருக்கும் மீன்?
    - சுறா

07. கண்கள் இல்லாத உயிரினம் அதிக முட்டையிடும் உயிரினம் எது?
    - கறையான்

08. வாழ்நாள் முழுவதும் நீர் அருந்தாத விலங்கு எது?
    - எலிக்கங்காரு

09. மிகச்சிறிய முட்டையிடும் பறவை எது?
    - தேன் சிட்டு

10. கூடிய மோப்ப சக்தி உடைய பறவை எது?
    - கழுகு

செல்வி. பி. கலையரசி
தரம் - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமும் மனித உடல் பற்றிய தகவல்களும்

| | | |
|---|---|---|
| ⇨ மருத்துவத்தின் தந்தை | - | கிப்போகிரடீஸ் |
| ⇨ மனித உடலின் சராசரி வெப்பநிலை | - | 98.4° 36.8°C |
| ⇨ வெப்பநிலையை அளவிடும் சர்வதேச அலகு | - | கெல்வின் |
| ⇨ மிகப் பெரிய சுரப்பி | - | ஈரல் |
| ⇨ மிகப் பெரிய அங்கம் | - | தோல் |
| ⇨ மிகப் பெரிய உறுப்பு | - | கல்லீரல் |
| ⇨ மிகப் பெரிய எலும்பு | - | தொடை எலும்பு |
| ⇨ மிகவும் வன்மையான பகுதி | - | பல் மிளிரி |
| ⇨ குருதியின் வகைகள் | - | A, B, AB, O |
| ⇨ மொத்த எலும்புகள் | - | 206 |
| ⇨ முதல் இறக்கும் பகுதி | - | மூளையின் கலங்கள் |
| ⇨ உயிரில் உள்ள திரவம் | - | இரத்தம் |
| ⇨ HIV வைரஸ் தொற்றினால் ஏற்படும் நோய் | - | எயிட்ஸ் |
| ⇨ எலியினால் பரப்பப்படும் நோய் | - | பிளேக் நோய் |

செல்வன். இ. கரிஸ்வரன்

தரம் - 10[B]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்
## முத்தமிழ்

வாழ்க தமிழே வாழ்க தமிழே
வானம் பொழிந்து வாழியவே!
முத்தமிழே செந்தமிழே
வானுயர வாழியவே

கேட்கும் போதும் பேசும் போதும்
இனிமை தரும் செந்தமிழே
வானம் பொழிந்து வாழ்த்துப் பாடி
வாழ்வாங்கு வாழியவே

வாழ்க தமிழே வாழ்க தமிழே
வானம் பொழிந்து வாழியவே!
முத்தமிழே செந்தமிழே
வானுயர வாழியவே

செல்வி. வி. டனிஷா
தரம் - 9

## பாடல்

புன்னகை பூத்த முகம் வேண்டும்.
நல்லெண்ணங்கள் நிறைந்த மனம் வேண்டும்.
சின்னஞ்சிறுவர் எம் வாழ்வு சிறப்பாய் சிறப்புற வேண்டும்.
உள்ளம் முழுவதும் புத்தம் புது
மலர் போல் மணம் வீசிட வேண்டும்.
எந்நாளுமிது நிலைத்திட வேண்டும்.

செல்வி. ச. கிருஸ்ரிக்கா
தரம் - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PLEASURE

Once upon a time there was a king. He was not satisfied although he was wealthy. Once in a month he went round his kingdom to see how his people live. Accidentely he happened to see a hermit with a pleasant face under a tree.

As soon as they went to his palace, he sent the officials and servants to bring the hermit to his palace. The hermit was given all sorts comfort and facilities. The hermit lived well in palace. The king ordered his servants to give the hermit whatever he asks but the hermit as was living in palace. Demanded that he should be given whatever the king gets.

On hearing this, the king becomes sad. He gave whatever the hermit demanded. But the hermit felt the impression of face of king was against him. After a fortnight the king came to hermit's place with a long face.

As soon as the king reached the hermit he said that he would like to take him to his village where he had already been. Immediately the hermit begged and pleased the king for making inconvenience and said "I myself alone could go to my place." Then the hermit started removing kingly clothes and everything. He looks his old clothes dressed and walked towards his village with pleasure. The king became alert, and with astonishment, he called out for the hermit. He humbly asked the cause for his pleasure. The hermit said that he does not love and possess anything in the world.

Because of your love for things made you worry much. After that the hermit walked to his village with more pleasure.

Miss. J. Thuvaraka

Grade - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் பகுதி

- மடக்கையைக் கண்டறிந்தவர் ஜோன் நஃபியர்.
- கயனாவின் தலைநகரம் ஜார்ஜ்டவுடன்.
- சிலி நாட்டில் உள்ள பாலைவனத்தின் பெயர் அடகாமா.
- டொமினிகாவின் தலை நகரம் ரோஸியெபு.
- அணுச்சிதைவு உலையின் தந்தை எனப்படுபவர் அட்டோஹாகன்.

# நாடுகளின் சிறப்பு

- சூரியன் மறையும் நாடு - இங்கிலாந்து
- சூரியன் உதிக்கும் நாடு - ஜப்பான்
- நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு - நோர்வே
- அதிகாலை அமைதி நாடு - கொரியா
- கண்ணீர் வாசல் - டாபெல் மண்டெப்
- ஆயிரம் வாவிகள் நாடு - பின்லாந்து

# மொழிகளும் எழுத்துக்களும்

பிறமொழிகளில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன என்று உங்களுக்கு தெரியுமா?

- ஆங்கிலம் - 26
- லத்தீன் - 22
- ஸ்பானிஷ் - 27
- சமஸ்கிருதம் - 48
- அறபு - 28
- சீனம் - 214
- ஜெர்மனி - 26
- பாரசீகம் - 31
- இத்தாலி - 25
- பிரெஞ்ச் - 26
- துருக்கி - 28

செல்வி. லி. சர்மிக்கா
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம்!

வாழ்க்கையில் நாம் எப்படிச் சோதனைகளை எதிர் கொள்கின்றோம் என்பதைப் பொறுத்து அவை தோல்வியாகவோ அல்லது வெற்றியாகவோ அமையலாம். ஆனால் முயற்சி இல்லாமல் வெற்றி வருவதில்லை.

ஒரு உயிரியல் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு ஒரு கம்பளிப்புழு எப்படி வண்ணத்துப் பூச்சியாக மாறுகிறது என்று சொல்லிக் கொடுத்தார். அவர் தனது மாணவர்களிடம் ஒரு வண்ணத்துப்பூச்சி கூட்டினைக் காட்டி அடுத்த சில மணிநேரங்களில் வண்ணத்துப் பூச்சி தனது கூட்டில் இருந்து போராடி வெளிவரப் போகிறது என்றும் ஆனால் அதற்கு எவருமே உதவி செய்யக்கூடாது என்று கூறிவிட்டு வெளியே சென்று விட்டார்.

மாணவர்களில் ஒருவன் அதன் மேல் இரக்கப்பட்டான். தனது ஆசியரின் சொல்லை மீறி, அந்த வண்ணத்துப்பூச்சி தனது கூட்டிலிருந்து வெளிவர உதவுவதற்குத் தீர்மானித்தான். அந்த வண்ணத்துப்பூச்சி போராட தேவையின்றி எளிதாக வெளியே வரும் பொருட்டு அந்தக் கூட்டை உடைத்தான். ஆனால் சிறிது நேரத்திற்கு பின் அந்த வண்ணத்துப்பூச்சி இறந்து விட்டது.

இப்பொழுது அந்த மாணவன் வண்ணத்துப்பூச்சியின் இறப்பிற்கு காரணமாகி விட்டான். எவ்வாறு எனின் கூட்டிலிருந்து வெளிவரப் போராடும் போராட்டம் உண்மையில் அதனுடைய சிறகுகள் வளரவும், தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவும் என்பதே இயற்கையின் சட்டம் மாணவன் அந்தப்பூச்சியை போராட்டத்தில் இருந்து காப்பாற்றி விட்டதால் அது இறந்து விட்டது. இதே கொள்கையை நமது வாழ்விற்கும் பயன்படுத்துங்கள். போராட்டங்கள் இல்லாமல் வாழ்வில் எதுவுமே பயன்தராது.

செல்வன். ம. வினுஸ்கரன்
தரம் - 11[B]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி உலகில் மைக்ரோ சொப்டின் தலைவர்

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | பில்கேட்ஸ்<br>ஒக்டோபர் 28 1955 இல் பிறந்தார்<br>சியாட்டில்<br>வாசிங்டன்<br>அமெரிக்கா |
| தந்தையார் பெயர் | : | வில்லியம் கென்றிகெட்ஸ் |
| தாயார் பெயர் | : | மேரி |
| சிநேகிதன் | : | பால் ஆலன் |
| வாழ்க்கைத் துணை | : | ஜனவரி 01.1994 வருடம் மெலிண்டா என்பவரை திருமணம் செய்து கொண்டார் |
| பிள்ளைகள் | : | 03 |
| மகள் | : | ஜெனிபர் காதரின் (மகள்)<br>போஃப் அடில் (மகள்)<br>ரோடியான் (மகன்) |
| பணி | : | மைக்ரோ சொப்டின் தலைவர்<br>ஹார்பிஸ் தலைவர் |

பில்கேட்ஸ் அவர் தனது பள்ளிப்படிப்பை ஒரு தொடக்கப் பள்ளியில் தொடங்கினார். சிறுவயதிலேயே அவருக்கு நிரலாக்கத்தில் (Programming) ஆர்வம் இருந்ததால் தனது 13வது வயதிலேயே நிரல்கள் எழுதத் தொடங்கினார். பிறகு 1937 இல் ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்தார். அங்கு அவரது நண்பன் ஷ்டிவ்பால்மாரின் வீட்டில் தங்கியிருந்து தனது படிப்பை மேற்கொண்டார். தனது படிப்பை முடித்த பிறகு உயிர் சிநேகிதன் பால்ஆலான் என்பவருடன் இணைந்து மைக்ரோ சொப் நிறுவனத்தை 1975 இல் ஏப்ரல் மாதம் 04ம் திகதி தொடங்கினார். கணனிப்பொறியில் பிற்காலத்தில் பெரிய புரட்சியை ஏற்படுத்தும் நம்பிக்கை அவருக்கும் அவருடைய நண்பருக்கும் இருந்தது. இதனால் அவர்கள் கணனிப்பொறிக்குத் தேவையான மென்பொருள்களை எழுதத் தொடங்கினார். அவருடைய இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைதூர நோக்கம் தான் இன்று அவருக்கும் அவருடைய நிறுவனத்திற்கும் மிகப்பெரிய வெற்றியை தேடித்தரலானது இவருடைய தலைமையில் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் நோக்கமானது நிறுவனத்தின் தொடர்வளர்ச்சியும் கணினி உபயோகிப்பதற்கு பூரணமான மனத்திருப்தியையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே ஆகும். இக்கால கட்டத்தில் மைக்ரோ சொப்ட் நவம்பர் 20.1985 இல் மைக்ரோ சொப்ட் வின்டோஷின் முதல் சில்லறை விற்பனை பதிப்பு வெளியிடப்பட்டது.

"தான் கணினிப்பாதையில் சென்ற தூரம் சொற்பம் செல்ல வேண்டிய தூரம் மிகமிக அதிகம்" என்று கூறப்பட்ட இவரது வாசகம் சிந்திக்கத்தக்கது. இக்கூற்றானது கணினி கல்வித் துறையில் விரிவினை எடுத்தியம்புவதாக உள்ளது. இக்கூற்று எமக்கு எதனை நினைவூட்டுகின்றது. "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற ஔவையாரின் அமுத வாக்கினையே ஆகும்.

எனவே மைக்ரோ சொப்டியலாளர்களின் விடாமுயிற்சியும் தன்நம்பிக்கையும் இவரை இவ்வளவு புகழின் உச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது. அவரின் இலக்குகள் எம்மால் அடையப்பட முடியாததொன்றல்ல. ஆதலால் கல்வித்துறையில் சாதனைகள் படைத்து புதிய வழியில் சிந்தனை செய்து பில்கேட்சை ஆதார புருஸராக கொண்டு புதுயுக படைப்பில் ஈடுபடுவோமாக.

செல்வன். த. தனுஷன்
தரம் - $10^A$

உரிமை இல்லாத உறவும்
உண்மை இல்லாத அன்பும்
நேர்மை இல்லாத நட்பும்
நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும்
என்றும் நிரந்தரமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளித் தகவல்கள்

- ❖ அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் பெயர் - நாஸா
- ❖ விண்வெளிக்கு சென்ற முதல் மனிதர் - யூரிககாரின்
- ❖ வான்வெளியில் உள்ள கோள்கள், ஆகாயக்கற்கள், உடுக்கள், வால்வெள்ளி வான் பொருட்கள் எனப்படுகிறது.
- ❖ சுயஒளி உடையது - சூரியன்
- ❖ ஞாயிற்றுத் தொகுதி - சூரியனையும் அதனைச் சுற்றி உள்ள கோள்களையும் உபகோள்களையும் உள்ளடக்கியது
- ❖ ஞாயிற்றுத் தொகுதியில் இருந்து நீக்கப்பட்ட கோள் - புளுட்டோ
- ❖ நாஸா - ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி நிகழ்ச்சித்திட்டத்திற்கு பொறுப்பான அமைப்பு
- ❖ பூமி தோன்றியது - 450 கோடி ஆண்டுகளுக்கு முன்னர்
- ❖ லைகா எனும் நாய் - விண்வெளிக்கு சென்ற முதலாவது உயிரினம் ஆகும். முதன் முதலில் சந்திரனுக்கு மனிதனை அனுப்பிய நாடு - அமெரிக்கா
- ❖ சந்திரனில் முதலில் காலடி வைத்தவர் - நீல் ஆம்ஸ் ரோங்
- ❖ பூமிக்கு அண்மையில் உள்ள கோள் - செவ்வாய்
- ❖ சூரியனுக்கு மிக அண்மையில் உள்ளகோள் - புதன்
- ❖ மிக கனமான அல்லது மிக பெரிய கோள் - வியாழன்
- ❖ கோள்களைச் சூழ வளையங்களை கொண்ட கோள் அல்லது துணைக்கோள்களை கொண்ட கோள் - சனி
- ❖ செந்நிறமாக தெரியும் கோள் - செவ்வாய்
- ❖ 365 - 1/4 நாட்களை கொண்ட நாட்காட்டியைக் (கலண்டர்) கண்டுபிடித்தவர் - எகிப்தியர்

செல்வன். சி. வேணுஷன்
தரம் - 10[B]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க வைக்கும் சில துளிகள்

01. தீராக் கோபம் போராய்ப்போகும்.

02. செயலில் தான் உனது திறமை வெளிப்படும்.

03. கெட்டிக்காரனை நதியில் தள்ளினாலும் அவன் வாயில் ஒரு மீனோடு வருவான்.

04. இரகசியத்தை காப்பாற்றினால் அது உன் அடிமை வெளியிட்டால் அதுவே உன் எஜமான்.

05. தன்னை நம்பும் மனிதனை உலகம் நம்பும்.

06. தேடுங்கள் தேவையானது தென்படும்.

07. நண்பர்கள் மூவர் தைரியம், புத்தி, நுண்ணறிவு.

08. பேசுபவர்கள் செயற்படுவதில்லை செயற்படுபவர்கள் பேசுவதில்லை.

09. அச்சம் தோன்றும் போது... ஊக்கம் தேவை.

10. நிதானமானவர்கள், நிரந்தரமானவர்கள்.

11. பல மனிதர்கள் உன் வெற்றிக்கு காரணமாகலாம், உன் தோல்விக்கு நீயே காரணம்.

செல்வன். கோ. ரிதர்சன்

தரம் - 09

போகும் போதே என்னை
இரசித்துக் கொண்டே போ
திரும்பி வரமாட்டேன் உனக்காக.
இப்படிக்கு - வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாட்டி வைத்தியம்

### கன்னத்தில் கறுப்புப் புள்ளி

குழந்தைகளுக்கு கன்னத்தில் கறுப்புப்புள்ளிகளாய் சில சமயம் சொரசொரப்பு ஏற்படும். இதை பட்டாம் பூச்சி ஒட்டு என்று கூறுவர். இதற்கு சாதிக்காயை இடித்து புள்ளி உள்ள இடங்களில் தடவுதல் வேண்டும்.

### வயிற்றில் முடி

குழந்தைகளுக்கு ஆகாரத்தோடு முடி ஏதேனும் புகுந்து விட்டால் ஒரு சிறு அளவு வெல்லத்தைப் பிசைந்து அதனுள் ஒரு நெல்லை வைத்து மூடி விழுங்கச் செய்தால் மலத்துடன் முடி வெளியேறி விடும்.

### இரத்தக்கட்டி

உடலில் இரத்தக்கட்டி முதலியவை வந்தால், அந்தி மந்தாரை இலை மேல் விளக்கெண்ணையைத் தடவிப்போடுங்கள், சீக்கிரம் கட்டி பழுத்து உடைந்து விடும்.

### முகப்பரு

முகப்பரு மற்றும் சிறு சிரங்கு, செவ்வாய்ப் புண்களுக்கு மரப்பாசியை அரைத்து போட்டால் முகப்பரு அற்றுப் போகும்.

செல்வி. ம. மிதுஷாகினி
தரம் - 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியற் தகவல்கள்

- இலங்கையில் புகழ் பெற்ற ஓவியர்கள் - சோளியஸ் மென்டீஸ், ஜோஜ் சீற் மஞ்சு சிறி
- சித்திர பாடத்தில் முதல் வர்ணங்கள் அல்லது மூல வர்ணங்கள் - சிவப்பு, மஞ்சள், நீலம்
- வெப்ப வர்ணங்கள் - செவ்வூதா, சிவப்பு, மஞ்சள்
- குளிர் வர்ணம் - பச்சை, நீலப்பச்சை, ஊதா, நீலம்
- நடுநிலை வர்ணம் - கறுப்பு, பச்சை
- விஞ்ஞான பாடமுதல் வர்ணம் - சிவப்பு , பச்சை, நீலம்
- துக்கத்தை குறிக்கப் பயன்படும் நிறம் - கறுப்பு
- அபாயத்தை குறிக்கப் பயன்படும் நிறம் - சிவப்பு
- கிளியொன்றின் மாதிரி உருவத்தை செய்வதற்கு மிக பொருத்தமான மூலப்பொருள் - குருத்தோலை
- ஒரிகாமி என்பது - காகித மடிப்புக் கலை
- இசைக்கருவிகளின் ராணி என அழைக்கப்படும் இசைக்கருவி - வயலின்
- அநேக இராகங்களில் பாடக்கூடிய உருப்படி - ராகமாலிகா
- இசையின் அடிப்படை ஸ்வரங்கள் - ஸ, ரி, க, ம, ப, த, நி
- ஸ்வரங்களை கீழ்ஸ்தாயில் தொடங்கி உச்ச ஸ்தாயி வரை இசைத்தல் - ஆரோகணம்
- உலகப் புகழ் பெற்ற ஓவியங்கள் -

| | |
|---|---|
| இறுதி இராப்போசனம் | - லியானாடோ டாவின்சி |
| மோனாலீசா | - லியானாடோ டாவின்சி |
| இறுதி தீர்ப்பு | - மைக்கல் ஆஞ்சலோ |

செல்வன். ரு . சஞ்சய்
தரம் - 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"வல்லாரை வெல்ல வல்லாரை உண்க" என்று கூறுவதுண்டு வல்லாரை ஒரு வகைக் கீரை. இதில் விற்ற மின்களும் தாது உப்புகளும் அடங்கியுள்ளன. இதை உணவுக் கீரை என்பதை விட ஒரு மூலிகை என்றே கூறலாம். கால்வாய்க்கரை, குளக்கரை, ஆற்றங்கரை, வயல் வரம்பு ஆகிய இடங்களில் இது தானாக வளர்ந்து கிடக்கும்.

இது தரையோடு தரையாக பத்து முதல் பதினைந்து cm சுற்றளவிலோ அல்லது நீள் வட்டத்திலோ அடர்ந்து படர்ந்திருக்கும் இதன் இலைகள் வட்ட வடிவமாக 25cm குறுக்களவுடன் கொடியின் கிளைகளில் கொத்துக் கொத்தாக அமைந்திருக்கும்.

வல்லாரையில் தங்கச் சத்தும் செம்பு சத்தும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதனால் இதை "மகா மூலிகை- வல்லாரை" என்றும் கூறுகிறார்கள். இந்தக் கீரையைச் சமைக்கும் போது இதன் சுவையும் மருத்துவ குணமும் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக இதனுடன் புளிகளைச் சேர்க்காமல் சமைப்பார்கள் புளியைச் சேர்த்தால் இதன் இயற்கைத் தன்மை மாறிவிடும்.

இது காய்ச்சல், தீராத மலச் சிக்கல், சாதாரண வயிற்று வலி, வயிற்றுப் புண், வாய்ப் புண் ஆகியவற்றைக் குணப்படுத்தும், உடல் சூட்டைத் தணிக்கும், நீரிழிவையும் குணப்படுத்தும். பொதுவாக இது நினைவுத் திறனை வளர்க்கிறது. மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. இருதயத்தை வலுப்படுத்துகிறது. நரம்புத் தளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது. தாது விருத்திக்கு உதவுகிறது. வாத நோய், சிறுநீரகக் கோளாறு, காய்ச்சல் முதலான நோய்களையும் குணமாக்குகிறது.

செல்வி. வ. தர்சிகா
தரம் - 10A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையின் மகிமை

1. மழை என்பது பூமிக்கு கிடைக்கும் மிகப் பெரிய வரப்பிரசாதமாகும்.

2. இந்த உலகில் உயிர்கள் மற்றும் காடுகள் நிலைப்பதற்கு மழை மிகவும் இன்றியமையாததாக காணப்படுகின்றது.

3. தாவரங்கள் உணவு தயாரிப்பதற்கு அவசியமாக விளங்கும் மழை தன்னகத்தே கொண்டுள்ள மகிமையை எடுத்துக் கூறுகின்றது.

4. மழை மேகங்கள் கடலிலும், நீர்த் தேக்கங்களிலும் இருந்து உருவாகின்றன. பின் சுருக்கமுற்று மழையாகப் பொழிகின்றது. மழை உருவாக காடுகள் அவசியமாகின்றன.

5. ஆதிகாலம் தொட்டு இன்று முதல் மழையை ஒரு தெய்வமாக வழிபடுகின்றனர்.

6. ஆனால் தற்போது மனிதர்கள் காடுகளை அழிக்கின்றனர். எனவே மாணவர்களாகிய நாம் நாளைய சந்ததியினருக்காக காடுகளை வளர்த்து மழையை பெறுவோம்.



செல்வன். ரூ. லவன்
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரீகத்தின் அடையாளச் சின்னங்கள்

அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வமாய்
அகில உலகமே போற்றியது - இங்கு
உன்னையும் என்னையும் ஈன்றவர் மேலென
உயர்வாய் நினைத்து வாழ்த்தியது!

பள்ளிச்சீருடை புனைந்துமே செல்கையில்
பெற்றவர் மனங்கள் களிக்கிறது! - உயர்
கல்வியில் உயர்வினை கண்டிடும் காலையில்
கரையிலா மகிழ்வில் குளிக்கிறது!

ஈன்ற பொழுதினில் பெரிதே உவந்தவள்
சான்றோன் என்கையில் சிரிக்கின்றாள்! - நாளும்
ஊன்று கோலென உயர்த்திய தந்தையும்
உவகையில் ஆடி மகிழ்கின்றார்!

கண்ணிலும் மேலாய் காத்தவுன் பெற்றோர்
கடைசியில் முதியோர் விடுதியிலோ? - புவி
மன்னனாய் நீயும் மகுடமே சூடினும்
மறந்தாய் எனில், அவர் தலை விதியா?

"பெற்றவர் மனங்கள் பித்து" எனச் சொன்னால்
"பிள்ளைகள் மனமும் கல்தானோ"? - உமைக்
கற்று உயர்த்திய கடவுளர் பெற்றோர்
கடைசியில் வாடுதல் மெய்தானோ?

நாகரிகத்தின் அடையாளச் சின்னங்கள்
நாட்டினில் முதியவர் இல்லங்களா? - இந்த
நானிலம் - மீதினில் அவர்களை மறந்திடில்
நாமவர் பெற்றிட்ட செல்வங்களா?

அகில உலகிலும் முதியவர் தன்னையே
அன்பாய் மதித்துப் போற்றிடுவோம்! - வாழ்வில்
தகமையில் உயர்ந்த தந்தை, தாய் மேலென்று
தரணியில் என்றென்றும் சாற்றிடுவோம்!

செல்வி. கா. அகலரசி
தரம் - 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்களை உண்பதனால் எமக்குக் கிடைக்கும் நன்மைகள்



- எமது அன்றாட வாழ்வில் பழங்கள் மிகவும் அத்தியாவசியமாகக் கருதப்படுகின்றன.

- இவை எமது உடலின் பல தொகுதிகள் சீராக இயங்குவதற்கு பிரதான காரணிகளாக விளங்குகின்றன.

- பழங்கள் எமது உணவுடன் சேர்வதன் மூலம் உடல் ஆரோக்கியம் உற்சாகம், நோயற்ற வாழ்வு, அழகு என்பனவற்றை எமக்குத் தரும்.

- எமது உடலைத் தாக்கும் நோய்கள் முற்றாக நீக்குவதற்கு மூளையில் சிந்திப்புத் திறன் அதிகரிப்பதற்கும் குருதிச் சுற்றோட்டம் மேன்மையாகுவதற்கும் பழங்கள் உதவுகின்றன.

- பழங்களின் மூலம் கிடைக்கும் கனியுப்பு, விற்றமின்கள், சுக்குரோசு, பொற்றாசியம், இரும்புச் சத்து ஆகியவை தலைமுடி மற்றும், நகங்கள், உடல் என்பன பொலிவு பெற மிகவும் அத்தியாவசியமாக இருக்கின்றது.

- எனவே தினசரி பழங்களை உணவாகவோ அல்லது உணவிற்கு பின்னே உட்கொள்ளல் சிறந்தது.


செல்வன். ரா.கரன்
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய மண்டலம்

பூமி சூரிய மண்டலத்தில் ஒரு சிறுபகுதிதான், சூரிய மண்டலத்தில் கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. அஸ்ட்ராயிட்ஸ் என்பது சிறிய கிரகங்கள் ஆகும். சூரிய மண்டலத்தைச் சேர்ந்தது தான். பல நட்சத்திரங்களின் தூரங்களைக் கணக்கிடுவது மைல்களாக அல்ல, ஒளி ஆண்டுகளாக கணக்கிடப்படுகிறது. பூமிக்கு வெகு அருகிலுள்ள பிரகாசமான நட்சத்திரம் Alpha Centaury அதன்தூரம் 5,000,000,000,000 மைல்களாகும்.



சூரியன் ஒரு நட்சத்திரம் போன்றது தான். பூமிக்கு வெகு அருகிலுள்ளது. சூரியனின் ஒளி இல்லாவிட்டால் பூமியில் வாழ்க்கை நடத்துவது கஷ்டம். சூரிய ஒளி இல்லையேல் பச்சைத் தாவரங்களில்லை, மிருகங்களில்லை, மனித உயிர்கள் இல்லை. சூரியன் 93,000,000 மைல்கள் பூமியிலிருந்து தள்ளி உள்ளது. சூரியன் பூமியைப்போல் திடப்பொருளுமல்ல.

செல்வி. க. சுஸ்மிதா

தரம் - 10A

# ஒத்த கருத்துச் சொற்கள்

- பொழில் - சோலை
- தழல் - நெருப்பு
- ஆழி - கடல்
- வழி - பாதை
- நெஞ்சம் - உள்ளம்
- கடன் - கடமை
- தகவல் - செய்தி
- தர்மம் - அறம்
- சூரர்கள் - வீரர்கள்
- குந்தகம் - தடை

செல்வி. வி. பிரக்ஷனா

தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திர ஜால எண்

1, 2, 3, 4, 8, 5, 7 இந்த எண் வரிசை அமைப்பை மேலும், கீழும் எப்படிக் கூட்டினாலும் விடை 27தான் கிடைக்கும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 2 | 8 | 5 | 7 | = | 27 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | = | 27 |
| 4 | 2 | 8 | 5 | 7 | 1 | = | 27 |
| 5 | 7 | 1 | 4 | 2 | 8 | = | 27 |
| 7 | 1 | 4 | 2 | 8 | 5 | = | 27 |
| 8 | 5 | 7 | 1 | 4 | 2 | = | 27 |
| 27 | 27 | 27 | 27 | 27 | 27 | | |

செல்வன். நா. ரதிக்ஷன்
தரம் - 04

# My Sweet Garden

I have a flower garden in my house compound. There are many flowers in my garden. My friends visit my garden and enjoy with me. Photographers come and take photos of it. Always I water them carefully. The flower I like most is Rose. I give flowers to my sweet friends when they leave me. I eamestly wait for the teacher's day celebration. Because I can make garlands with my own flowers for teachers.



Miss. K. Sathushtrikka
Gr - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை

மண்ணில் மனிதர் என
மகிழ்வுடன் நாம் பிறந்தோம்
எண்ணில் அடங்காத
எத்தனையே ஆசை கொண்டோம்

பாழும் வறுமை வந்து
பறித்ததுவே ஆசைதனை
சின்னஞ்சிறு வயதில்
சீருணவு தனை இழந்தோம்

முள்ளும் தோலுமாய் நாம்
முடங்கியே கிடந்தோமே
பஞ்சம் பசி பட்டினியில்
பல நாட்கள் கழித்திட்டோம்

வறுமை என ஒன்று வந்து
வாழ்விலே விரட்டியதால்
சொல் லொணாத் துயர் கண்டு
சோர்ந்திட்டோம் பலகாலம்

வறுமை ஒழிய வேண்டும்
வதனம் எல்லாம் மலர வேண்டும்
பலகாலம் பட்ட துன்பம்
பாரை விட்டகல வேண்டும்.

நாடு செழிக்க வேண்டும்
நல்லுழைப்பு வளர வேண்டும்
பூமியிலே வறுமை என்ற
பூதத்தை விரட்ட வேண்டும்

வாரீர் அணிதிரள்வோம் வறுமைதனை
நாம் ஒழிப்போம்

செல்வன். அ. கலைப்பிரியன்
தரம் - 10A



# சுருக்கக் குறியீடுகளும் விரிவாக்கங்களும்

| | | |
|---|---|---|
| ➡ AIDS | - | Acquired Immunence Deficiency Syndrome |
| ➡ DNA | - | Deoxyribo Nucleic Acid |
| ➡ NATO | - | North Atlantic Treaty Organization |
| ➡ UNCTAD | - | UN Conference on Trade and Development |
| ➡ CDMA | - | Code Division Multiple Access |
| ➡ CEPA | - | Comprehensive Economic Partnership Agreement |
| ➡ HTML | - | Hypertext Markup Language |
| ➡ BCPL | - | Basic Combined Programming Language |
| ➡ WWW | - | World Wide Web |
| ➡ UNO | - | United Nation Organization |
| ➡ UNESCO | - | United Nation Education & Science, Culture Organization |
| ➡ ADB | - | Asian Development Bank |
| ➡ UNDP | - | United Nation Development Programme |
| ➡ 3R | - | Reduce, Reuse, Recycle |
| ➡ WHO | - | World Health Organization |

செல்வி. ச. டிலைக்ஷனா
தரம் - 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01. உலகின் சுற்றாடல் தினம் கொண்டாடப்படுவது எப்போது?
    - ஜூன் 6ந் திகதி

02. உலகின் தபால் தினம் கொண்டாடப்படுவது எப்போது?
    - ஒக்டோபர் 10ம் திகதி

03. தேசிய வீரர்கள் தினம் கொண்டாடப்படுவது எப்போது?
    - மே 22ம் திகதி

04. பறக்காத பறவை?
    - பென்குயின்

05. மிகப் பெரிய பறவை?
    - தீக்கோழி

06. இறக்கை இல்லாத பறவை?
    - கிவி

07. உலகிலே அதிக உயரமான கோபுரம் எது?
    - ஈபிள் கோபுரம்

08. உலகிலே மிக வேகமாக தரையில் ஓடும் விலங்கு எது?
    - சிறுத்தை

09. மிகப் பெரிய முட்டை இடும் பறவை எது?
    - தீக்கோழி

10. சமுத்திரங்களில் மிக ஆழமானது எது?
    - மரியானா

11. சைக்கிள் வண்டியை கண்டுபிடித்தவர்?
    - மக்மிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பாலைவனக் கப்பல் என அழைக்கப்படும் மிருகம் எது?
- ஒட்டகம்

13. ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் எது?
- கிரேக்கம்

14. இலங்கையின் இலவசக் கல்வி வழங்கப்பட்ட ஆண்டு எது?
- 1945

15. இலங்கையின் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்ட ஆண்டு எது?
- 1980

செல்வி. இ. அனுஸ்கா
தரம் - 03

# பாடல்

தம்பி தம்பி ஓடிவா!
சின்னத் தம்பி ஓடிவா!
செல்லத் தம்பி ஓடிவா!
பாடம் படிக்க ஓடிவா! (தம்பி)

துள்ளித் துள்ளி ஓடிவா!
பாட்டுப் படிக்க ஓடிவா!
கதை கேட்க ஓடிவா!
அன்புத் தம்பி ஓடிவா! (தம்பி)

பள்ளி செல்ல ஓடிவா!
பாடம் படிக்க ஓடிவா!
நேரம் ஆச்சு ஓடிவா!
நிறையப் படிக்க ஓடிவா! (தம்பி)

செல்வன். சி. மதுசன்
தரம் - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலன் தரும் குறிப்புக்கள்

- நின்று அல்லது படுத்த நிலையில் நீர் அருந்தினால் நரம்புகளும் இரைப்பையும் தளர்வடையும்.
- இரவு உண்ட பின் தூரம் நடப்பது உடலுக்கு நன்மை பயர்க்கும் (100 அடி தூரம்)
- நினைவாற்றலுக்கு தேன் சிறந்தது. தேவையான அளவு பருகி வரவேண்டும்.
- தாய்ப்பால் சுரக்க வில்வம்பழும் சிறந்தது. இப்பழம் மேலும் சக்தி தரக்கூடியது.
- தோல் உரிதல், தேமல் ஏற்படல் தடுக்க கருஞ்சீரகத்தை தேய்த்து வரலாம்.
- உப்பை உணவுக்கு முன், பின் தொட்டுச் சுவைப்பது ஜீரணத்துக்கு உதவும். வெண் குஸ்டம் வராமல் தடுக்கும் சக்தி உப்புக்கு உண்டு.
- பேரீச்சம் பழத்தை பாலில் வேக வைத்து வெண்ணெய்யும் சேர்த்து சாப்பிடுவது சிறந்த சத்துணவாகும். மூளை, இதயம் ஆகியவற்றிற்கு பலம் கொடுக்கும்.
- சீத்தாப் பழ விதைகளை அரைத்து தலையில் தேய்த்து சிறிது நேரத்தின் பின் குளித்தால் பேன் தொல்லை நீங்கும்.

செல்வி. சௌ. சதுர்ஸிகா

தரம் - 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி தந்த வெற்றி

முதன் முதலில் மின்சார மின்குமிழை
எரியவிட 3 ஆயிரம் வழிமுறைகளில்
முயன்று அல்வா எடிசன்
தோற்றுவிட்டார்.

இறுதியாக 36 மணி நேரம்
உணவை மறந்து - உறக்கத்தை
துறந்து மின்சார மின்குமிழை
எரிய விடுவதில் அமோக வெற்றி
பெற்றார்.

"முயற்சி செய்யுங்கள் வெற்றி பெறுங்கள்"



செல்வி. ச. லக்ஷிகா
தரம் - 11A

உருவத்தில் எப்படி இருந்தாலும்
உள்ளத்தில் குழந்தையாய் இரு
இந்த உலகமே உன்னை நேசிக்கும்.

அறிவாளிக்கு அறிவு அதிகம் ஆனால்
முட்டாளுக்கு அனுபவம் அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் ஏழு பருவங்கள்

- பேதை - 5 வயது தொடக்கம் 7 வயதுக்கும் இடைப்பட்டது.
- பெதும்பை - 7 வயது தொடக்கம் 11 வயதுக்கும் இடைப்பட்டது
- மங்கை - 12 வயது தொடக்கம் 13 வயதுக்கும் இடைப்பட்டது.
- மடந்தை - 14 வயது தொடக்கம் 19 வயதுக்கும் இடைப்பட்டது.
- அரிவை - 20 வயது தொடக்கம் 25 வயதுக்கும் இடைப்பட்டது.
- தெரிவை - 26 வயது தொடக்கம் 31 வயதுக்கும் இடைப்பட்டது.
- பேரிளம் பெண் - 32 வயது தொடக்கம் 40 வயதுக்கும் இடைப்பட்டது.

செல்வி. கு. சிந்துஜா
தரம் - 12

# எண்களை அறிவோம்

| | | |
|---|---|---|
| 10 | - | Ten (1 பூச்சியம்) |
| 100 | - | Hundred (2 பூச்சியம்) |
| 1000 | - | Thousand (3 பூச்சியம்) |
| 10000 | - | Ten Thousand (4 பூச்சியம்) |
| 100000 | - | Hundred Thousand Or one lakh (5 பூச்சியம்) |
| 1000000 | - | Million (6 பூச்சியம்) |
| 10000000 | - | Ten Million (7 பூச்சியம்) |
| 1000000000 | - | Billion (9 பூச்சியம்) |
| 1000000000000 | - | Trillion (12 பூச்சியம்) |
| 1000000000000000 | - | Quadrillion (15 பூச்சியம்) |

செல்வன். பா. சண்முகப்பிரியன்
தரம் - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைத்தல், மதுசாரப் பாவனையிலிருந்து எதிர்காலச் சந்ததியைப் பாதுகாப்போம்



நாம் நமது அன்றாட சூழலில் புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்தும் பழக்கமுள்ள பலரைக் காண்கின்றோம். இவர்களில் சிலர் உங்களது குடும்ப அங்கத்தவர்களாகவோ அல்லது உங்களது நண்பர்களாகவோ கூட இருக்கலாம். எனினும் நீங்கள் ஒரு தடவையேனும் புகைப்பதற்கோ, மதுபானம் அருந்துவதற்கோ முயற்சிக்கக் கூடாது. அத்தோடு உங்கள் குடும்பத்தினரை, நண்பர்களை இது போன்ற தீய பழக்கங்களிலிருந்து பாதுகாப்பதும் உங்கள் கடமையாகும்.



ஏனெனில் புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை பின்வரும் தீய விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. அவையாவன:

- புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை உங்களை மரணத்திற்கு இட்டுச் செல்லக் கூடியன.

  புகைக்கும் பழக்கமுள்ளோரில் 50% மானோர் இதனால் இறக்கின்றார்கள் அதாவது உலகில் வருடம் தோறும் 6 மில்லியன் மக்கள் இதனால் இறக்கின்றார்கள். ஒவ்வொரு செக்கனுக்கும் ஒரு நபர் இப்பழக்கத்தால் மரணிப்பதோடு இலங்கையில் மாத்திரம் வருடாந்தம் 20,000 பேர் புகைத்தல் காரணமாக மரணிப்பதாக யுனிசெவ் (Unicef) ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றது.

  மற்றும் மதுப்பாவனை காரணமாக உலகம் முழுவதும் ஒவ்வொரு 10 செக்கனுக்கு 1 நபர், எனும் ரீதியில் மரணம் நிகழ்வதோடு இந்த வீதம் ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருவதாகவும் (Unicef) ஆய்வுகள் கூறுகின்றன.

- புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை உங்கள் குடும்பத்தினரையும் நண்பர்களையும் நோயாளியாக்குகின்றன.

  சிகரெட் புகையானது உடலின் ஒவ்வொரு உறுப்புக்களிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. மாரடைப்பு, பாரிச வாதம் போன்ற நோய்களுக்கு முக்கிய காரணமாக இது விளங்குகின்றது. அத்தோடு புகைத்தலானது ஆஸ்துமா போன்ற நீண்ட கால நோய்களுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காரணியாக விளங்குகின்றது. சிகரெட் புகையில் 250 தீங்கான நச்சுப் பொருட்கள் அடங்கியுள்ளதோடு அவற்றில் 50 இற்கு மேற்பட்டவை புற்று நோயை ஏற்படுத்த வல்லவையாகவும் காணப்படுகிறன. அத்தோடு வாய்ப்புற்று நோய், சுவாசப்பை புற்றுநோய், இரைப்பைப் புற்றுநோய், சிறுநீரகப் புற்று நோய் போன்ற பல்வேறு விதமான புற்று நோய்களையும் இவை ஏற்படுத்துகின்றன.

- புகைப்போருக்கு அருகில் இருப்போரும் சிகரெட் புகையினால் பாதிக்கப் படுகின்றார்கள். இன்னொருவர் சிகரெட்டை புகைக்கும் போது வெளிவரும் புகையை சுவாசிப்பதால் சிறுவர்களுக்கு, கர்ப்பிணிகளுக்கு ஆஸ்துமா நுரையீரல் தொற்று மற்றும் தொண்டை, குரல்வளை, சுவாசப்பை புற்றுநோய்களும் ஏற்பட வாய்ப்புண்டு. இன்னொருவர் உங்கள் அருகில் புகைக்கும் போது அதை எதிர்க்க உங்களுக்கு உரிமை உள்ளது.

- புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை அவர்களை வறுமை நிலைக்கும் இட்டுச் செல்லும். Unicef ஆய்வு சுட்டிக் காட்டுவது யாதெனில், "இலங்கையில் தினமும் 250 மில்லியன் ரூபாய்களுக்கு புகைக்கின்றார்கள். அதாவது சிகரெட்களும் மற்றும் மதுபான விற்பனையால் பெறப்படுகின்ற வரிப்பணத்தை விட மதுப்பாவனையாளர், புகைப்பவர் சிறுவயதில் நோய்வாய்ப்படும் போது அவர்களது மருத்துவ தேவைகளுக்கு செல்வாகும் பணம் மிகவும் அதிகமாகும்". இவ்வாறு தாம் ஈட்டிக் கொள்ளும் வருமானத்தின் பெரும் பகுதியை புகைத்தல், மதுசாரப்பாவனைக்காக செலவிடும் குடும்பத்தில் வறுமையும் அதனால் எழக் கூடிய சமூகப் பிரச்சனைகளின் ,குற்றங்களும் அதிகமாகும்.

- புகைத்தல், மற்றும் மதுசாரப்பாவனை ஆகியன பாவிப்போரை அழகற்றவர்களாகவும் துர்நாற்றமுடையவர்களாகவும் சந்தோசமற்றவர்களாகவும் ஆக்குகின்றன.

- புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை என்பன உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும், நண்பர்களையும் வாழ்க்கையில் தோல்வியுறச் செய்கின்றன.

- புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை ஒருவரது உடல் உறுதியைக் குறைப்பதோடு. விளையாட்டிலும் ஒருவரது செயற்திறனைக் குறைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை ஒருவரது உணர்வுகளைப் பாதிப்பதனால் அதிக கோபம், தேவையற்ற மன உளைச்சல் போன்றவற்றை ஏற்படுத்தி அவரை ஓர் மன நோயாளியாக மாற்ற வல்லது.

எனவே இவ்வாறு புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை உங்களை பல கேடுகளுக்கு இட்டுச் செல்வதனை உணராது செயற்படுகின்ற உறுதியற்றவர்களே புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை போன்ற பொறிக்குள் அகப்படுகின்றார்கள். இவர்களை இதிலிருந்து மீட்பதற்கு உதவி செய்ய வேண்டியது நம் கடமையாகும். புகைத்தலை பரீட்சித்துப் பார்க்க முயற்சிக்க வேண்டாம். அது உங்களை அடிமையாக்கக் கூடியது. உங்களால் அப்பழக்கத்தை நிறுத்த முடியாமல் போகலாம். புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனை என்பனவற்றால் ஏற்படக்கூடிய மேற்காட்டிய தீய விளைவுகளை இதற்கு அடிமையாகியுள்ள நம் குடும்ப உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் தெரியப்படுத்துவதிலும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் நாம் பங்காளிகளாக இருந்து எமது எதிர்கால சந்ததிகளை புகைத்தல் மற்றும் மதுசாரப்பாவனையிலிருந்து பாதுகாப்போம்.

திருமதி. மஞ்சுளா சந்திரகாந்தன்
ஆசிரியை, ஈச்சந்தீவு, கிண்ணியா

## மழை

காகிதக் கப்பல் செய்து வைத்தேன்
வாய்க்கால் கூட வெட்டி வைத்தேன்
வா மழையே வா வா மழையே வா
சின்னச் செடியை நாட்டி வைத்தேன்
வா மழையே வா வா மழையே வா
வீதிப் பக்கம் வந்து நின்றேன்
மேலே மேலே பார்த்து நின்றேன்
வா மழையே வா வா மழையே வா



செல்வி. ப. பிருத்திக்கா
தரம் - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பற்றி.....

கல்வி உயிரைப் போன்றது
அதனைக் கற்று விட்டால்
நாம் படகில் ஏறி
கடலை கடந்ததற்கு சமன்

எந்தவொரு பிரச்சனையிலிருந்தும்
எளிதாக விடுபட்டு விடலாம் கற்றால்,
பெரும் மன்னனுக்கும் மதிப்பில்லை - உலகில்
அதிகளவு பணத்துக்கும் மதிப்பில்லை

நிலையானதாக இருக்கும்
ஆனால் மன்னனோ அல்லது பணக்காரனோ
வைத்திருக்கும் செல்வம்
நீர்க்குமிழியைப் போன்றது

நிலையில்லாததாகிவிடும்
எனவே கல்வி எல்லாவற்றையும் விட மேலானது

செல்வி. ச. சதுஸ்ரிகா
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

முயற்சியுடையாரே
இகழ்ச்சி அடையாராம்
மூத்தோர்கள் சொல்லி வைத்த
முது மொழியும் இதுவாகும்

முயற்சி செய் எந்நாளும்
முன்னேற முடியும் நீ
முயன்றிட்டால் எச்செயலும்
முடியாது போய்விடுமோ?

கற்பதற்கு முயன்று பார்
கல்வி வந்து உனைச் சேரும்
கடமைக்கு முயன்று பார்
கட்டாயம் புகழ் சேர்க்கும்

ஒழுக்கத்தை முயன்றுபார்
உயர்த்திவிடும் உன்மதிப்பை
நற்பழக்கத்தை முயன்றுபார்
நாடிவரும் நற்பெயரும்

அன்புக்கு முயன்று பார்
அரவணைக்கும் எந்நாளும்
பண்புக்கு முயன்று பார்
பார் புகழ வாழ வைக்கும்

உண்மைக்கு முயன்று பார்
ஓடி விடும் பொய் அனைத்தும்
நன்மைக்கு முயன்று பார்
நலம் சேர்க்கும் உந்தனுக்கு

நேர்மைக்கு முயன்று பார்
நீதிக்கு வழி கூறும்
கேண்மைக்கு முயன்று பார்
கெடுக்க மனம் தோன்றாது

பணிவுக்கு முயன்று பார்
பழிவந்து சேராது
துணிவுக்கு முயன்று பார்
துன்பமுனை நெருங்காது


செல்வி. ம. மதுஷா
தரம் - 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத புதிருக்கு விடை

"கோழி வந்ததா? முதலில் முட்டை வந்ததா?" எனும் உலக மகா புதிருக்கு இன்று அறிவியல் விடையைக் கண்டுபிடித்துள்ளது.



ஹெக்டார் என்ற மிக உயர் தொழிநுட்பம் கொண்ட கணினியைக் கொண்டு முட்டை ஓட்டில் உள்ள ஓவோஸ்லீடின் என்ற மிகக் கடினத் தன்மையுடைய புரதச் சத்து கொண்ட மரபணுக்கள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டபோது தனது வேதியியல் பண்பில் இருந்து மாறவில்லை மாறாக, அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியதாம்.

எனவே முட்டை போடும் நிலையில் உள்ள கோழியின் உடலில் இருக்கும் சத்துக்கள் மூலம் தான் முட்டை ஓட்டுக்குத் தேவையான புரதப் பொருள் உருவாவது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே முட்டைக்குரிய தேவையான புரதம் மற்றும் இதர சத்துக்கள் நிச்சயம் கோழி கொடுத்ததே என்பதால், கோழிதான் முதலில் வந்தது எனும் முடிவுக்கு வரலாம்.

திருமதி. ந. பாத்திமா நிஸானி
(ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் ஒரு கோயில்...

எமது உடல் உறுப்புக்களில் முக்கியமான ஒன்றாக விளங்கும் எமது இதயத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? இரத்தக் குடுவை என்று மருத்துவர்களும் அறிஞர்களும் குறிப்பிடும் எமது இதயம் மிகவும் அற்புதமானதும், நுட்பமானதும் கூட!

இவ்வாறெல்லாம் வர்ணிக்கப்படும் எமது இதயம் பெரும்பாலானோருக்கு இடது புறமும், கோடியில் ஒருவருக்கு வலது புறமும் உள்ளது. ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு லட்சம் தடவை துடிக்கிறது. இது வருடத்திற்கு 3 கோடியே 60 லட்சம் தடவைகள் இது துடிக்கின்றதென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். உங்களுடைய இரத்தக் குழாய்கள் 96,000 கிலோ மீட்டர் நீளமாக உள்ளன.

சராசரியாக 03 கோடியே 30 லட்சம் லீட்டர் இரத்தத்தை எமது இதயம் பாய்ச்சுகின்றது. இதை வைத்து 28 நீச்சல் குளத்தை நிரப்பலாம்! உங்களுடைய இரத்தத்தில் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை 2 கோடியே 25 லட்சம் டிரில்லியன்கள்! சிவப்பு அணுக்கள் ஏறத்தாழ நான்கு மாதங்களே உயிர் வாழ்கின்றன. வருடா வருடம் உங்களுடைய உடல், 75 டிரில்லியன் சிவப்பு அணுக்களை உற்பத்தி செய்கின்றன.


செல்வி. சு. விஷாலினி
தரம் - 10

வாழ்க்கை என்பது சாகும் வரை அல்ல
நீ மற்றவர்களின் மனதில் வாழும் வரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார்



அன்புமிக்க பெரியவரே
அறிவை திரட்டும் பெரியவரே
சிறுவர்கள் உம்மை புகழ்ந்திடவே
சிறந்த பாடல் பாடினீரே

நீதி நூல் பயில் என்று
நித்தம் கூறிய பெரியாராம்
வந்தே மாதரம் என்றவரே
வையகம் புகழ வாழ்ந்தவரே

செல்வன். கி. தனுஷ்ரிகன்
தரம் - 08

# வாழ்க்கையில் தெரிய வேண்டியவை

| | | |
|---|---|---|
| அழகு | - | நிலைஇல்லாதது |
| ஆசை | - | அழிவில்லாதது |
| இன்பம் | - | நிலைக்காதது |
| ஈகை | - | கொடுக்க வேண்டியது |
| ஊர் | - | மதிக்க வேண்டியது |
| எண்ணம் | - | மதிக்க வேண்டியது |
| ஏழ்மை | - | பராமரிக்க வேண்டியது |
| ஐயம் | - | நீக்க வேண்டியது |
| ஒழுக்கம் | - | வளர வேண்டியது |
| ஓர்மை | - | இருக்ககூடாதது |
| ஔடதம் | - | நோய் நிவாரணியான |

செல்வி. சி. மிதுக்ஷா
தரம் - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவங்கள்

- முன்னேற வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் யாருடனும் சண்டை போடாதீர்கள். அதில் நேரம் வீணாகிறது. நாயிடம் கடிபடுவதிலும் பார்க்க அதற்கு வழி விடுவதே மேல்.

- பொறுத்திருப்பதன் மூலம் எந்தக் காரியத்தையும் சாதித்து விடலாம். தண்ணீரை ஒரு சல்லடையில் கூட எடுத்துச் செல்ல முடியும் அது உறையும் வரை பொறுத்திருப்போமானால்.

- முன்னேற்றம் என்பது முற்றுப் பெற்றதல்ல முயன்று கொண்டிருப்பதுதான்.

- சிரிக்க முடியாத முகம் நல்லதாய் இருக்க முடியாது.

- அரைத்த கைக்கும் மணம் தரும் சந்தனம் போல உதைத்த காலுக்குச் செருப்பாய் இருப்பவன் தான் உத்தம நண்பன்.

செல்வி. சு. தீபிகா
தரம் - 11A





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ விழுமியப் பண்புகள்

சைவ சமயத்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் சைவ விழுமியங்களைப் பின்பற்றுவது மிகவும் அவசியமாகும். சைவ விழுமியப் பண்புகள் நம் ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் மிகவும் அத்தியாவசியமாக விளங்குகின்றது. சைவ விழுமியப் பண்புகளுள் கொடை, உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், சகோதரத்துவம், உதவுதல், பெரியோரை மதித்தல் என்பவை அடங்கும்.

மனித வாழ்வில் இன்பம், துன்பம் இவை இரண்டும் மாறி மாறி நடக்கின்றன. இவை இரண்டிலும் சைவ விழுமியப் பண்புகள் தொடர்புபடுகின்றன. சைவசமயமே மெய்ச்சமயம் என்று முதியோர் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். மனிதன் மனிதனாக வாழ விழுமியப்பண்புகளை கடைபிடிப்பது அவசியமாகும்.

இவ் விழுமியங்கள் மேம்பாடுமிக்க வாழ்க்கையை நடாத்துவதற்கும், நற்பண்புகளை கடைபிடிப்பதற்கும் இன்றியமையாததாக அமைகின்றன. மனித வாழ்வை மேம்படுத்த உதவும் வாழ்க்கைப் பண்புகளாக இவ் விழுமியங்கள் விளங்குகின்றன. இப்பண்புகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் உயர்வான வாழ்வை நாம் வாழமுடியும்.

இதிலும் இந்து சமயத்தவர்களாகிய நாம் இவ்விழுமியப் பண்புகளை கடைப்பிடித்தல் மிகவும் அவசியமாகும்.

செல்வி. சு. துருஷா
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில் புதிய பாதை

கல்வி எனும் பாதையிலே
கல்லிருக்கும் முள்ளிருக்கும்
கவனத்துடன் நடந்திட்டால்
காலமெல்லாம் பயனிருக்கும்
இவை அனைத்தும் மனதில் நினைத்து
வளர்த்திடுவோம் இலட்சிய நம்பிக்கையை

நாம் செல்லும் பாதை நீண்டு சென்றால்
பயணத்தின் தூரம் தொடர்ந்திடும்
அறியாமை எனும் பொய்யான இருளகற்றி,
சிந்திக்க வைக்கும் அறிவுச் சுடரை ஏற்றிடுவோம்,
நல்ல பல மாற்றங்கள் எம்மில் தோன்ற,
நம் நம்பிக்கையை புதியதாய் அமைத்திடுவோம்.

செல்வி. கா. சுஜீர்தனா
தரம் - 10B

# வன்முறைகளை ஒழிப்போம்

நன் செய் பயிர் விளைத்து
நாட்டுக்கு வளம் அழித்து
புன்மை நிலைதனையெல்லாம்
புவியிலிருந்து ஓட்டவல்ல

மன்னாதி மன்னரெனும்
மகுடத்துக்குரியவரால்
வன்முறைகள் தான் ஒழிந்து
வருங்காலம் ஒளிபெறுமா?

நாட்டு நன் நடைமுறையால்
நலன் ஓம்பும் செய்கைகளால்
மாட்சிமைகள் தனையெல்லாம்
மனந்திருந்தி வினை செய்யும்

வாழையடி வாழையென
வாழ்ந்துயர்ந்து புவிமாந்தர்
நாளையே சிரித்திருக்கும்
நாள் வருமா மிக விரைவில்!

செல்வி. ப.சந்தியா
தரம் - 08




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தில் பூக்காத பூக்கள்

| | | |
|---|---|---|
| 01. | மனிதன் புகழும் பூ | – சிறப்பு |
| 02. | மலர்ச்சியில் வரும் பூ | – சிரிப்பு |
| 03. | காலையில் வரும் பூ | – விழிப்பு |
| 04. | சமயலறையில் உள்ள பூ | – அடுப்பு |
| 05. | ஒளிதரும் பூ | – லாம்பு |
| 06. | சுவைதரும் பூ | – உப்பு |
| 07. | கோபத்தில் வரும் பூ | – வெறுப்பு |
| 08. | குற்றம் புரிந்தால் வரும் பூ | – குறுகுறுப்பு |
| 09. | சந்தோசத்தில் வரும் பூ | – கிளுகிளுப்பு |
| 10. | மற்றவரை குறித்து வரும் பூ | – கணிப்பு |
| 11. | காயங்களினால் வரும் பூ | – வலிப்பு |
| 12. | காரமான பூ | – உறைப்பு |
| 13. | மனதை கவரும் பூ | – வனப்பு |
| 14. | சோதிடர் எழுதும் பூ | – குறிப்பு |
| 15. | படகோட்டியிடம் உள்ள பூ | – துடுப்பு |
| 16. | சிறுவர் செய்யும் பூ | – குறும்பு |
| 17. | மனிதன் பேண வேண்டிய பூ | – மதிப்பு |
| 18. | மானம் காக்கும் பூ | – உடுப்பு |
| 19. | வயலில் உள்ள பூ | – வரம்பு |
| 20. | மனிதனிடம் காண வேண்டிய பூ | – பண்பு |

செல்வி. ஜே. அஸ்வின்
தரம் - 04





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விபத்துக்கள் பற்றி....

எடுத்தவுடன் உனது
வாகனத்தை பறக்க விடாதே
கவனி - வீதி விதிமுறையை
பின்பற்றும் சட்டத்தினை
சாரதிகளின் கவனயீன கோர
விபத்தினால்
சோகத்திலும் துயரிலும்
ஆழ்ந்து பல உயிர்கள் ஆதரவின்றி
தவிக்கின்றன
வாகனத்தை எடுத்திடு அவதானமாக
பயணம் சென்றிடு அவதானமாக
செலுத்திடு வாகனத்தை அவதானமாக
உன்னை நீ காத்திடு
பிறரை நீ காத்திடு
பூமியை நீ காத்திடு
பொறுமையுடன் நடந்திடு

செல்வன். ச. வினித்
தரம் - 08

## இவனே மனிதன்

பிறர் உழைப்பில் வாழ்பவன்
மனிதன் அல்லன்
பிறர் வாழ உழைப்பவனே மனிதன்
பிறர் சிரிக்க வாழ்பவன்
மனிதன் அல்லன்.
பிறரை சிரிக்க வைப்பவனே
மனிதன் ஆவான்.

பிறரை பகைத்து வாழ்பவன்
மனிதன் அல்லன்
பிறர் பகையின்றி வாழ்பவனே
நல்லதோர் மனிதன்
பிறரைக் கெடுத்து வாழ்பவன்
மனிதன் அல்லன்
பிறருக்கு கொடுத்து வாழ்பவனே
சிறந்த மனிதன்.

செல்வி. இ. லக்ஷனா
தரம் - 11B

உருவத்தில் எப்படி இருந்தாலும்
உள்ளத்தில் குழந்தையாய் இரு
இந்த உலகமே உன்னை நேசிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கும் ஓர் நாள்....

ஆடியோடிய கால்களுக்குக் கிடைத்த ஓய்வு
பல்லிழந்த வாய்க்கு ஆரம்பித்த வேலை
தசைகள் வற்றி தோல்கள்
சுருங்கி வலுவிழந்த உடல்

மூலை முடுக்கெல்லாம் திரிந்தவனுக்கு
முற்றுப்புள்ளி
வீட்டின் மூலையொன்றே தஞ்சம்
இல்லையேல் மடமே முதுமைக்குச் சொந்தம்

கற்றுக் கொடுத்தவன் நடக்கவும்
முடியாமல் தவழவும் இயலாமல்
அனுபவம் நிறைந்த குழந்தையாய்
முதுமையின் பிடியில்

இளமையின் துடிப்பில்
மறந்த முதுமை
முதுமையின் அனுபவத்தில்
இனிக்கும் இளமை

மகனே! மகனே!
இன்று முதுமையின் பிடியில்
உன் மடியில் நான் - நாளை
பிறர் மடி நாட வரும் உனக்கு ஓர் நாள்.......

செல்வி. சே. நிவேதிகா
தரம் - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில மொழியின் அவசியம்

இன்றைய நவீன உலகில் ஆங்கிலமொழி நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய, கற்றிருக்க வேண்டிய மொழி. இந்த ஆங்கில மொழி பிறநாட்டவர் மொழியைச் சேர்ந்திருக்கலாம். ஆனால் நமக்கும் பிறருக்கும் பயன்படாத மொழி அல்ல (I. C. I) அதாவது தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் என்னும் பாடத்தை படிப்பதற்குக் கூட இந்த ஆங்கில மொழி அத்தியாவசியமானதொன்று.

எதிர்காலத்தில் நாம் படித்து வேலை செய்வதற்குக் கூட இந்த ஆங்கில மொழி அவசியமாகும். தமிழ் மொழி நம் தாய்மொழி ஆனால் ஆங்கில மொழி எதிர்காலத்தில் நம்மை ஆட்சிசெய்யக் கூடிய ஒரு மொழி. இந்த ஆங்கில மொழியினை நாம் இயன்றளவாவது கற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

"காலம் சக்கரம் போன்றது மிகவும் வேகமாக சுழன்று விடும் அதற்கேற்ப வாழப் பழகிக் கொள்" என்ற சிந்தனையுடன் செயல்படுவோமானால் நம்மால் முடியாதது என்று எதுவுமில்லை. இன்று என்னால் முடியாது நாளை செய்வோம் என்று செயல்படுவதைவிட இன்று எம்மால் இயன்றளவு முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு தான் ஆங்கிலமொழியை இன்று இல்லை நாளை என்று இருப்போமானால் காலம் கடந்து விடும்.

ஆங்கில மொழியின் அவசியத்தை நம்மால் இப்பொழுது புரிந்து கொள்ள முடியாதாயினும் எதிர்காலத்தில் புரிந்து கொள்ள முடியும் எனவே மாணவர்களாகிய நாம் ஆங்கில மொழியின் அவசியத்தைப் புரிந்து நடப்போமாக!



முயற்சி செய்வோம் முடியாதது என்று
எதுவுமில்லை.

செல்வி. த. கிருத்திக்கா
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி

குருவிடம் சென்ற சீடன் ஒருவன் விதி என்றால் என்ன? பகுத்தறிவு என்றால் என்ன? என்று வினவினான்.

குரு சீடனைப் பார்த்து உன் வலது காலைத் தூக்கு என்றார் சீடன் வலது காலைத் தூக்கிய படி நின்றான்.

சரி இப்போது நீ தூக்கிய வலது காலை கீழே இறக்காமல் உனது இடது காலையும் தூக்க முடியுமா? என்றார் குரு.
அது எப்படி முடியும் என்று கேட்டான் சீடன்

அதற்கு குரு "உன்னால் ஒரு காலை மீட்டும் தூக்க முடிந்ததே இது தான் பகுத்தறிவு இரண்டு கால்களையும் ஒரே சமயத்தில் தூக்க முடியாத நிலை இருக்கிறதே அது தான் "விதி" என்று விளக்கம் சொன்னார்.

உன்னால் மாற்றமுடியாததும், உனது சக்திக்கு அப்பாற்பட்டதும் தான் விதி என்றார். அவர்.

செல்வன். நி. ரிதன்
தரம் - 11

## Give Me Five

1. Hands to help
2. Mouths Quiet
3. Eyes looking
4. Ears listening
5. Hearts Caring

Mas. S. Shathustikan
Gr -11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரும்பதம்

01. அணை - அணைக்கட்டு
02. சாடிவரல் - மோதிவரல்
03. கண்ணறை - சிறுஅறை
04. பொழில் - சோலை
05. நிலத்தழல் - நிலத்தின் வெப்பம்
06. நன்செய் - விளையும் வயல்
07. புன்செய் - கொல்லை நிலம்
08. உலர்ந்த - காய்ந்த
09. தினை - தானியம்
10. ஆழி - கடல்
11. தகவல் - செய்தி
12. தர்மம் - அறம்
13. சூரர்கள் - வீரர்கள்
14. குந்தகம் - தடை
15. நிபந்தனை - உறுதி

செல்வி. மு. நிதுஜா
தரம் - 07

## ஆயுதம்

ஆயுதங்கள்
கானகத்தில்
வேடுவர்களின் ஆயுதம் "வில்"!
இலக்கியத்தில்
கவிஞர்களின் ஆயுதம் "சொல்"!
ஆர்ப்பாட்டத்தில்
சிலரின் ஆயுதம் "கல்"!
போர்க்களத்தில்
சிலரின் ஆயுதம் "செல்"!
சமிபாட்டில்
வாயின் ஆயுதம் "பல்"!
உலகத்தில்
பயங்கரமான ஆயுதம்
இவை ஏதுமில்லை
நா ஒன்றே தான்
அதைக் காத்து நில்!

செல்வி. த. கனகாசினி
தரம் - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்கான சில வைரவரிகள்

1. தட்டிப்பறிப்பவன் வாழ்ந்ததும் இல்லை விட்டுக் கொடுப்பவன் வீழ்ந்ததும் இல்லை
2. நீ விண்ணை முட்ட வேண்டுமானால் உன் வியர்வை முதலில் மண்ணை முட்ட வேண்டும்.
3. விதைத்தவன் உறங்கலாம் ஆனால் விதைகள் ஒரு போதும் உறங்குவதில்லை.
4. முயற்சி தவறலாம் ஆனால் முயற்சிக்கத் தவறாதே.
5. நமது பிறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும் இறப்பு ஒரு சம்பவமாக இருக்கக்கூடாது.
6. தனிமை சில வேளைகளில் சிறந்த தோழனாகும்.
7. தீமைகளைப் புதை நன்மைகளை விதை.

செல்வி. சு. சியேனி
தரம் - 11A





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School என்ற ஆறு எழுத்து சொல்லிற்கு விளக்கம் தெரியுமா?

| | | |
|---|---|---|
| S | Sincere | உண்மை |
| C | Character | நடத்தை |
| H | Health | ஆரோக்கியம் |
| O | Obedient | கீழ்ப்படிவு |
| O | Order | ஒழுங்கு |
| L | Learn | அறிவு |

# ஆசிரியர் மகிமை

| | | |
|---|---|---|
| T | Tact | சாமர்த்தியம் |
| E | Education | கல்வியறிவு |
| A | Ability | திறமை |
| C | Character | நன்னடத்தை |
| H | Health | ஆரோக்கியம் |
| E | Enthusiasm | ஊக்கம் |
| R | Regularity | ஒழுங்குமுறை |

செல்வன். கா. ஜஸ்நிதன்
தரம் - 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.fromoldbooks.org

# அழகு

தமிழுக்கு மொழியழகு மொழியிற்கே எழுத்தழகு
மழையிலேயே சாரலழகு சாரலிலே துளி அழகு
காலையிலே சூரிய ஒளி அழகு
ஒளியிற்கே பாதையழகு

இரவிலே சந்திரனழகு
சந்திரனுக்கு வெண்மை அழகு
சூரியனுக்கு கதிரழகு
கதிருக்கே ஏழு நிறமழகு

மயிலுக்கு நடனமழகு
நடனத்துக்கே அங்க அசைவு அழகு
கவிஞனின் கவிதை அழகு - அதற்கு
பொய் தான் அழகு

செல்வி. ர. தக்ஷனா
தரம் - 11B

# நற்பழக்கங்கள்

அதிகாலையில் எழுந்திடு
அழகாய் பாடம் படித்திடு
குறைவாய் உண்ண முயன்றிடு
ஒழுங்காய்ப் பள்ளி சென்றிடு
அறிவால் பிறரை வென்றிடு
தயங்காது எதையும் ஆற்றிடு
தாய்நாடு தனைப் போற்றிடு

செல்வி. ரா. லதிஷ்ரிகா
தரம் - 02





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | 1ஆவது ஆண்டு நிறைவு விழா | - | கடதாசி விழா |
| 02. | 2ஆவது ஆண்டு நிறைவு விழா | - | பருத்தி விழா |
| 03. | 5ஆவது ஆண்டு நிறைவு விழா | - | இரும்பு விழா |
| 04. | 10ஆவது ஆண்டு நிறைவு விழா | - | தகர விழா |
| 05. | 20ஆவது ஆண்டு நிறைவு விழா | - | சீனக் களிமண் விழா |
| 06. | 25ஆவது ஆண்டு நிறைவு விழா | - | வெள்ளி விழா |
| 07. | 50ஆவது ஆண்டு நிறைவு விழா | - | பொன் விழா |
| 08. | 60ஆவது ஆண்டு நிறைவு விழா | - | மணிவிழா/ வைரவிழா |
| 09. | 75ஆவது ஆண்டு நிறைவு விழா | - | பவளவிழா |
| 10. | 80ஆவது ஆண்டு நிறைவு விழா | - | அமுத விழா |
| 11. | 100ஆவது ஆண்டு நிறைவு விழா | - | நூற்றாண்டு விழா |

# புறாவைப் பற்றித் தெரிந்து கொள்வோம்



முற்காலத்தில் புறாக்கள் மூலமே செய்திகள் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. புறாக்கள் சிறிய மரக்குச்சிகளைக் கொண்டு கூடு கட்டுகின்றன. புறாக்களின் பார்வை மிகவும் சக்தி வாய்ந்தது. இவற்றால் வண்ணங்களைப் பார்க்க முடியும் அத்துடன் மெல்லிய ஒலியையும் கேட்க முடியும்.

செல்வன். ர. ரதீஸன்
தரம் - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவரங்கள் பற்றிய பொது அறிவு

1. எண்ணெய் உற்பத்திக்கு பயன்படும் பூ சூரியகாந்தி. இதனால் மக்கள் உடல் ஆரோக்கியமும் பாதுகாப்பும் ஏற்படுகின்றது.

2. மும்மலர்கள், பனம்பூ, வேப்பம்பூ, அகத்திப்பூ ஆயுள்வேத மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது. வேப்பம்பூ - மக்கள் உணவில் பயன்படுத்துகின்றனர். அகத்திப்பூ மக்கள் உணவில் அன்றாடம் பாவிக்கின்றனர்.

3. தனிப்பழமாகிய பனம்பழம், தேங்காய், தோடம்பழம் என்பன பனாட்டுக்கும் மக்களின் பல உணவிலும் சேர்க்கப்படுகின்றது. தேங்காய் மக்கள் அன்றாடம் உணவு சமைப்பதற்கு பயன்படுகின்றது.
தோடம்பழம் மக்கள் உணவில் ஒரு பகுதியாக உட்கொள்வர் அத்துடன் நோய் எதிர்ப்பு சக்திக்கு உகந்தது.

4. கூட்டுப்பழமாகிய அன்னாசிப்பழம், பலாப்பழம் என்பன மக்களால் விரும்பி உண்ணும் பழங்கள் ஆகும். அத்துடன் பல பானங்கள், பிஸ்கட் வகைகள் என்பவை தயாரிக்கப்படுகின்றன.

5. திரள்பழமாகிய அன்னமுன்னா மிகச் சத்துள்ளது. நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது. இதனை மக்கள் விரும்பி உண்ணுவார்கள்.

செல்வி. H. சுவேதிகா
தரம் - 04

வாழ்க்கை எளிதாகி விடும்
மன்னிப்பை கேட்பதற்கும், கொடுப்பதற்கும் நீ கற்றுக் கொண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுகளின் பழைய பெயர்களும் இன்றைய பெயர்களும்

| பழைய பெயர் | இன்றையபெயர் |
| --- | --- |
| கதம்ப நதி | மல்வத்து ஓயா |
| கங்கா நதி | மகாவலி கங்கை |
| பம்பரகந்த நதி | மாணிக்க கங்கை |
| கல்யாணி நதி | களனி கங்கை |
| கோண நதி | கலா ஓயா |
| ஜஜ்ரா நதி | தெதுரு ஓயா |
| கார கங்கை | அம்மன் கங்கை |
| கிரிந்தி ஓயா | கிரிந்தி நதி |


செல்வன். வி. ருனிஷன்
தரம் - 05

# ஆதவன் (பாடல்)

இருளைப் போக்கும் ஆதவன்
இன்பம் நல்க வருகிறான்!
கருதும் தனது கடமையில்
கடுகளவும் தவறிடான்!

அயர்வைப் போக்கி வைக்கவே
அலைகடலில் தோன்றியே!
உயர உயரச் சிரிக்கிறான்
ஒளிக் கரத்தை விரிக்கிறான்!

வானில் சென்றுமே மறு
நாளில் தோன்றும் ஆதவன்
ஏணி யின்றி உச்சியில்
ஏறி நின்று பார்க்கின்றான்!



செல்வன். சி. ஹபிஷன்
தரம் - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுக்கொள்

பூக்களிடம் கற்றுக்கொள்
புன்னகை புரிவாய்!
மரங்களிடம் கற்றுக்கொள்
வள்ளலாய் வளர்வாய்!

பறவையிடம் கற்றுக்கொள்
உறவை இணைப்பாய்!
விலங்கிடம் கற்றுக்கொள்
வீரமாய் நடப்பாய்!

நதியிடம் கற்றுக்கொள்
நன்மைகள் செய்வாய்!
மலையிடம் கற்றுக்கொள்
மாண்புடன் இருப்பாய்!

கடலிடம் கற்றுக்கொள்
ஞானத்தைப் பெறுவாய்!
காற்றிடம் கற்றுக்கொள்
காலத்தை வெல்வாய்!

விண்ணிடம் கற்றுக்கொள்
விஞ்ஞானி ஆவாய்!
மண்ணிடம் கற்றுக்கொள்
வாழ்வியல் தெளிவாய்!

செல்வன் சு. ரதுஷன்
தரம் - 04

# மாணவர்களுக்கு அறிவுரை

பள்ளிக்குத்தான் போகணும்
பாடமெல்லாம் படிக்கணும்!

நீதிக் கதைகள் கேட்கணும்
நேரம் கடைப்பிடிக்கணும்!

பாட்டுப் பாடி மகிழணும்
பந்தும் விளையாடணும்!

நூலகமும் போகணும்
நூல் அறிவை வளர்க்கணும்!

ஒழுக்கம் பல கற்கணும்
உயர்ந்த பண்பில் வளரணும்!

நல்ல நட்பைத் தேடணும்
நாளும் பெருமை சேர்க்கணும்!

செல்வன். கு. ஹர்ஷாந்
தரம் - 02





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடூழி நீ வாழ வாழ்த்துகின்றேன்!

வானில்வரும் சுடரெனவே வாழ்வியலை வளம்படுத்தக்
கேணிச்சுடராகிக் கிரணங்கள் பரப்பி வந்தாய்!
நானிலத்தோர் பண்பாட்டை நலியாது காக்கின்ற
தேனினிய சஞ்சிகையுன் திறன்கண்டு வாழ்த்துகின்றேன்!

கற்கின்ற மாணவர்கள் கல்வியுடன் நிற்காமல்
பற்பல துறையினிலும் படிப்படியாய் உயர்வுபெற்று,
விற்பன்னர் எனவுயர்ந்து விறல் படைக்க களம் தந்து
நிற்கின்ற சஞ்சிகையுன் நேர்த்தியினை வாழ்த்துகின்றேன்.

ஆசான்கள் வழிகாட்டல் அடியொற்றி, அற்புதமாய்
பேசரிய இலக்கியத்தைப் பேணிநிதம் வளர்க்கின்ற
ஆசையுடன் காசினியில் அடியெடுத்து வைக்கின்றாய்!
நேசமுடன் சஞ்சிகையுன் உயர்வுக்காய் வாழ்த்துகின்றேன்!

உரிமையினைச் சமத்துவத்தை உலகினிலே நிலைநாட்ட,
அரியபல பணிசெய்யும் ஆற்றலுடன் மாற்றமிலா
வருகையினைக் கண்ணுற்றேன்! வற்றாத வாஞ்சையுடன்
பெருமனதாய் சஞ்சிகையுன் பெற்றியினை வாழ்த்துகின்றேன்!

இலைமறை காய்போலும் இருக்கின்ற மாணவர்தம்
கலையார்வம் மேலோங்கக் கைகொடுக்கும் பணி தன்னால்,
தலைமுறை தலைமுறையாய் தமிழரது இலட்சியங்கள்
நிலைநிறுத்தி, நீடூழி நீவாழ வாழ்த்துகின்றேன்!

செல்வி. கௌ. ஈஸ்வரகௌரி
(ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்வோம்

01. உலகின் மிகப்பெரிய நதி எது?
- மிசுசிபி

02. உலகில் சனத்தொகை கூடிய நாடு எது?
- சீனா

03. பறக்காத பறவை எது?
- பென்குயின்

04. மிகப்பெரிய பறவை எது?
- தீக்கோழி

05. நீந்தத் தெரியாத மிருகம் எது?
- ஒட்டகம்


06. இறக்கை இல்லாத பறவை எது?
- கிவி

07. சத்தம் போடாத விலங்கு எது?
- ஒட்டகச்சிவிங்கி

08. தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை எது?
- புறா

09. மிக உயரத்திற் கூடுகட்டும் பறவை எது?
- கழுகு

10. மிகச்சிறிய தேசிய கீதத்தை உடைய நாடு எது?
- ஜப்பான்



செல்வி. தி. சம்பூர்ணிகா
தரம் - 07



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உப்பு பற்றிய அரிய சில தகவல்கள்

நாம் அன்றாடம் உண்ணும் உணவு எவ்வளவு ருசியாக இருந்தாலும் அதில் உப்பு சிறிதளவாவது இல்லையென்றால் அதை நாம் மனமார உட்கொள்ளமுடியாது. உப்பில்லா விட்டால் மிருகங்கள் கூட உணவை உட்கொள்ளாது. ஏனெனில் அவற்றுக்கும் உப்பு அவசியமான ஒன்றாகும். மனிதர்களுக்கும் அவ்வாறே!

பழங்காலத்தில் உரோமாபுரியில் ஊதியத்துக்குப் பதிலாக உப்பைக் கொடுத்தார்கள். அதுமட்டுமல்லாமல் பண்டைய காலத்தில் உப்புக்கான வரியும் அறவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் உப்பின் மகிமையும் உப்பின் அவசியமும் புலப்படுகின்றன. நம் உடல் வேர்க்கின்றது. இதனால் உப்பு நம் உடலில் இருந்து வெளியேறுகின்றது. இதைச் சீர்செய்யவே நாம் உணவில் உப்பைச் சேர்த்துக் கொள்கின்றோம். மிருகங்கள் ஒன்றை ஒன்று நாவினால் நக்கிக் கொள்வதன் மூலம் தமக்குத் தேவையான உப்பினைச் சம்பாதித்துக் கொள்கின்றன. இறைச்சியை உண்ணும் மிருகங்களுக்கு உப்பு தேவை என்பதில்லை. ஆனால் மரக்கறி உண்ணும் பிராணிகளுக்கு உப்பிட்ட உணவு கட்டாயம் தேவை.

அத்தோடு உடலில் உப்பு குறைவடைந்தாலும் நல்லதல்ல, அதிகமானாலும் நல்லதல்ல. உப்பு அதிகமானால் மூளையைத் தாக்கும். உயர்ந்த இரத்த அழுத்தம் ஏற்படும். அல்லது குறைந்த இரத்த அழுத்தம் ஏற்படும். குறைந்த இரத்த அழுத்தக்காரர்களுக்கு உப்பிட்ட ஊறுகாய்களை உணவுடன் சேர்த்துக் கொள்ளுமாறு பல டாக்டர்கள் கூறியுள்ளனர். அத்தோடு உப்பின் மகிமையை "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்ற பழமொழி எடுத்துக் கூறுகின்றது. எனவே நாம் இதற்கேற்ப உடலுக்குத் தேவையான அளவு உப்பைச் சேர்த்து நோயற்ற வாழ்வை வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!


செல்வி. சி. கிரிஷிகா

தரம் - 10A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம்




செல்வி. செ. கௌசிகா

தரம் - 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

01. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் அவன் யார்?
    - எறும்பு

02. நாலுகால் வீரன் நன்றிக்கு உதாரணம் அவன் யார்?
    - நாய்

03. ஓட்டு வீட்டுக்காரனுக்கு வேகமாய் நடக்க வராது அவன் யார்?
    - ஆமை

04. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?
    - கிளி

05. கொக்கு நிற்குது குளம் வற்றுது அது என்ன?
    - விளக்கு

06. நாலுகால் உண்டு நடக்க முடியாது அவன் யார்?
    - கதிரை

07. பற்கள் உண்டு ஆனால் கடிக்கத் தெரியாது அது என்ன?
    - சீப்பு

08. தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?
    - பென்சில்

09. உயிரற்ற பறவை ஊரூராய் பறப்பான் அவன் யார்?
    - விமானம்

செல்வி. த. பிருத்திக்கா
தரம் - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயி

ஓ! உலகமே
ஓராயிரம் புதுமைகள் காணும் நீ
ஒவ்வொரு நொடியும்
ஒரு முறை திரும்பி எம்மைப் பார்
நாட்டின் வளர்ச்சிக்கு,
நாளும் உழைத்து
நாடி தளர்ந்தவர்கள்!

விண்ணைத் தொடும்
விஞ்ஞான யுகத்தில்
விடிவைத் தேடித்திரியும்
மின்மினிப் பூச்சிகள்!

உழைப்பின் கொடுமையால்
உடலும் உள்ளமும்
உணர்ச்சியற்றவர்கள் என்று
உதாசீனப் படுத்தப்பட்டவர்கள்
மறுப்புப் போராட்டம்
மரணப் போராட்டம் நடத்துகின்ற
மானிட வர்க்கமே நாம்!

செல்வி. எஸ். மிதுசியா
தரம் - 11

## கவிஞன்

நிஜத்திற்கும்
நிழலுக்குமிடையில்
பேச்சு வார்த்தை நடாத்தும்
"சமாதானத் தூதுவன்"

உவமைகளை
உவமானங்களுக்கு
ஒப்பந்தக் கல்யாணம் செய்துவைக்கும்
"கல்யாணத் தரகன்"

உணர்ச்சிகளுக்கு
வைத்தியம் பார்க்கும்
"டாக்டர்"
மனித மூளைகளைச்
சலவை செய்வதால்
"சலவைத் தொழிலாளி"

மடமைகளைச்
சவரம் செய்வதால்
"சவரத் தொழிலாளி"

செல்வி. கா. துஷா
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பாவுக்கு ஒரு பாடல்

பாப்பா உனக்கொரு பாட்டி சைப்பேன்
பண்புடன் வாழ்ந்திடப் பழகிடுவாய்
நாட்டின் நலம் தனில் நாட்டமுடன்
நாளும் உழைத்திட வேணுமம்மா

எண்ணையும் எழுத்தையும் கண்ணெனக்கொள்
என்றும் இனியவை இயம்பிடுவாய்
மண்ணில் உயர்ந்திட வழியதுவே
மகிமை நிலை பெற துணையதுவே



உண்மைப் பேச்சே உயர்வுதரும்
உயிர்த்துணையாக அதுகாக்கும்
விண்ணே இடிந்து வீழ்ந்திடினும்
வீணே கவலை கொள்ளாதே

நல்லவர் சேர்க்கை நல்வழியாம்
நன்மைகள் பொழிய நலமதுவாம்
பொல்லாப் பகைமை அணுகாதே
பெரியோர் துணை நாம் காத்திடுவோம்.

திருமதி. செ. சுதாகரன்
ஆசிரியை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வல்லுனர் விளையாட்டுக்கள்

மெய்வல்லுனர் விளையாட்டுக்கள்

- நடத்தல்
- ஓட்ட நிகழ்ச்சி
  - மத்திய ஓட்டம் - 300m, 5000m
  - நெடுந்தூர ஓட்டம் - 10000m
  - தடைதாண்டல் ஓட்டம் 100m, 110m, 400m, 800m
- மைதான நிகழ்ச்சி
  - பாய்தல்
    - நீளம் பாய்தல்
    - உயரம் பாய்தல்
    - முப்பாய்ச்சல்
  - போடுதல்
    - குண்டு போடுதல்
  - எறிதல்
    - ஈட்டி எறிதல்
    - சம்மட்டி எறிதல்
    - பரிதி எறிதல்
- வீதி ஓட்டம்
- குறுக்கான ஓட்டம்

செல்வன். ச. கபிக்சன்

தரம் - 06

தலை குனிந்து என்னைப் பார்

தலை நிமிர்ந்து உன்னை நடக்க வைப்பேன்.

இப்படிக்கு - புத்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் வேண்டாம்!

யுத்தம் வேண்டாம் எமக்கு - நல்ல
சமாதானம் வேண்டும் நமக்கு
சத்தியம் நிலைத்தல் வேண்டும் - என்றும்
நித்தமும் ஒற்றுமை வேண்டும்
ஒன்றாய் வாழ்வதே ஒற்றுமை - என்றும்
நன்றாய் வாழ்வதே ஒற்றுமை

செல்வன். எஸ். அனுசியன்
தரம் - 09

# மறவாதே!

பெற்ற தாயை மறவாதே
பேணும் தந்தையை மறவாதே
கற்பித்த குருவை மறவாதே
கடவுள் எண்ணம் மறவாதே

கல்வியை என்றும் மறவாதே
கற்றதைச் செய்ய மறவாதே

நல்லவர் சொல்லை மறவாதே - நீ
நாட்டுப் பணியை மறவாதே
ஒழுக்கம் தன்னை மறவாதே
உண்மை பேச மறவாதே

செல்வி. ர. லக்சிகா
தரம் - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியைக் காப்பாற்றுவோம்!

எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் பாதுகாத்து வைக்க வேண்டிய முக்கிய சொத்து பூமிதான். பல வருடங்களுக்கு முன்பு. அதாவது சுனாமியை நாம் காண்பதற்கு முன்பெல்லாம் ஜப்பானில் மட்டுமே பூகம்பம் வரும் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், உலகெங்கும் பூமியைத் தட்டி எழுப்புகிறது பூகம்பம்! அதை விட முக்கியமான ஒன்று உலகையே ஆட்டிக் கொண்டிருக்கிறது.... அது உலக வெப்பமயமாதல் ஆகும். இதனால் பனிப்பாறைகள் உருகி உடைந்து, கடலில் கலந்து கடல் மட்டம் உயர்ந்து கடலோர நகரங்களை விழுங்கிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பூமியின் வெப்பம் அதிகரித்து வருவதைத் தடுக்க, வாகனங்களைப் பயன்படுத்துவதைக் குறைப்பது, பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையைத் தவிர்ப்பது, தண்ணீரைக் குறைவாகச் செலவழிப்பது, குளிர்சாதனம் பயன்படுத்துவதைக் குறைப்பது, வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்பது ஆகியவை சிறந்த செயல்களாகும்.

நிலத்தடி நீர்மட்டம் குறைவதும் பூகம்பத்துக்கு ஒரு காரணம்! ஆதலால் மழைநீர் சேமிப்பு, கிணறுகளை மேலும் ஆழமாகத் தோண்டாமல் இருப்பது மற்றும் மாசு இல்லாமல் பார்த்துக் கொண்டால் பூமிக்கு மட்டுமல்ல.... நமக்கும், நம்முடைய சந்ததியினருக்கும் நலம் பல கிடைக்கும்.

திரு. ம. உமாசங்கர்
ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்வம் எப்படி உருவாகிறது?

கர்வம் என்பது மற்றவரின் கருத்துக்கு மதிப்பு கொடுக்காமல் இருப்பதாகும். வாழ்க்கையில் ஏற்படும் வெறுப்பு, பயம், தோற்று விடுவோம் என்ற எண்ணம், ஆகியவற்றை பெண்களின் சமுதாய வளர்ச்சியைப் பாதிக்கும் முக்கிய காரணங்களாகக் குறிப்பிடலாம். தான் என்ற கர்வம் பல நேரங்களில் பலரிடமும் வெளிப்படுகிறது. இதுதான் "ஈகோ" என்று குறிப்பிடப்படுகிறது. இது ஒரு அளவுக்கு இருக்க வேண்டியது தான். இது எல்லை மீறும்போது குற்றச் சாட்டுக்குரியதாகிறது. அவருக்கே ஆபத்தாகி விடுகிறது. ஒருவரிடம் இருக்கும் கர்வம் அவர் யாரிடம் நட்பு வைத்திருக்கிறாரோ அவர் மூலமாக வெளியே வந்து விடும். கர்வம் எப்படி உருவாகிறது? தான்தான் எல்லோரையும் விட சிறந்தவன் என்று தனக்குத்தானே புகழ்மாலை சூடிக்கொள்ளும் போது கர்வம் உருவாகிறது. தன்னை மற்றவர்கள் தேவையான அளவு அங்கீகரிக்கவில்லை என்ற எண்ணம் இவர்களிடம் தோன்றும். இதனால் தன்னை தனிமைப்படுத்திக் கொள்வார்கள். இந்த எண்ணம் அவர்கள் வளர்ச்சியைப் பாதிக்கும்.

மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து வாழத்தெரியாதவர்கள், அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்கமாட்டார்கள். தனது கருத்தைத் தான் மற்றவர்களிடம் திணிக்க முயற்சிப்பார்கள் எனக் கூறப்படுகின்றது. அடுத்தவர்கள் சொல்வதை அமைதியாகக் கேட்கத் தொடங்கி, அவர்களது கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கும் விதத்தில் தங்களை இவர்கள் மாற்றிக் கொள்வது நல்லது.


கோபம் ஓரளவு தேவைதான் ஆனால் கோபம் எல்லை மீறும் போது கோபம் கொள்கிறவர்களையே அது ஆபத்துக்குள்ளாக்கி விடுகிறது. குறிப்பாக முற்கோபம் அதிக ஆபத்தைத் தரக்கூடியது. அடிக்கடி கோபம் கொள்கிறவர்களின் ஆயுள் குறைந்து கொண்டே போகும் எனவும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வருகின்றது.

திரு. கி. கிசாந்தன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான பரிசோதனைகள்



செல்வன். வி. நிதுசன்

தரம் - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்களும் அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் வழிகளும்

## சூறாவளி

குறிப்பிட்டதொரு கடல் பிரதேசத்திலே தாழமுக்கம் நிலவுகின்ற பொழுது சுழற்சியும், வேகமும் கொண்டதான காற்றுகள் பலமாக வீசுமாக இருந்தால் அது சூறாவளி எனப்படும்.

- சூறாவளி ஏற்படுவதற்கு முன் எச்சரிக்கையை வழங்குதல்.
- சூறாவளி ஏற்படுகின்ற போது கடலுக்குச் செல்வதைத் தவிர்த்தல்.
- தொழிநுட்ப சாதனங்களின் பாவனையைக் குறைத்தல்.

## மண்சரிவு

குறிப்பிட்டதொரு மலைப் பிரதேசத்தில் இயற்கை, மனித செயற்பாடுகளின் புவியீர்ப்பு விசைக்கேற்ப மண்ணானது கீழே சரிந்து விழுமாக இருந்தால் அது மண்சரிவு எனப்படும்.

- மரங்களை அழிப்பதைத் தவிர்த்தல்.
- பாதுகாப்பான இடங்களில் குடியிருப்பை அமைத்தல்.
- மண்சரிவு ஏற்படுவதற்குரிய அபாயம் நிலவுமாக இருந்தால் அவ்விடத்தை விட்டு நகர்ந்து செல்லல்.
- மூடு பயிர்களை வளர்த்தல்.

## வெள்ளப் பெருக்கு

அதிக மழைவீழ்ச்சி காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. இவ்வாறு ஏற்படுவதற்கு முன் வெளியில் செல்வதற்கான ஆபத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும். மழை நீர், ஆற்றுப்பெருக்கு என்பவை அனைத்தாலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது.

- மண் அகழ்வுகளை தடுத்தல்.
- மரங்களை நாட்டல்.
- காடுகளை அழிக்காது இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிமலை வெடிப்பு

புவியின் உட்பகுதியிலே காணப்படுகின்ற மக்மா பாறைக் குழம்பானது புவியின் அகவிசை காரணமாக புவியின் ஐதான பகுதியில் திண்ம, திரவ வாயு என்பவை சிந்தி வெளி வருமாக இருந்தால் அது எரிமலை வெடிப்பு எனப்படும்.

- மண் அகழ்வுகளைத் தடுத்தல்.
- எரிமலை வெடிக்கின்ற தன்மையுள்ள பிரதேசத்தில் இருந்து பாதுகாப்பான இடத்திற்குச் செல்லல்.
- சுரங்க அகழ்வுகளைக் குறைவடையச் செய்தல்.

செல்வி. சௌ. லோவிகா
தரம் - 08

## உணவு



பாண், பணிஸ், வடை
பல நோய்களைத் தந்திடுமே
புடிங் கேக் லட்டு பூந்தி
பற்களை நன்கு பாதிக்குமே
சோறு காய்கறி பழங்கள்
சக்தியை நமக்கு தந்திடுமே

செல்வி. வி. டினுஸ்கா
தரம் - 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

சஞ்சிகைக்கான நிதி

அனுசரணை வழங்கிய

திரு. திருமதி ரவிக்குமார் ஆனந்தி,

ஆலங்கேணி – 01, கிண்ணியா

குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச்

சமூகத்தினர் சார்பாக நன்றிகளைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்

தி / கிண் / ஆலங்கேணி விநாயகர் மகா
வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org